
ரூ. 8.00

திருவள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி - ஆவணி
சூன் - ஆகஸ்ட் 2018

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்



குன்றக்குடியில் 8-8-2018 அன்று
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்
அவர்களுக்கான நினைவு அஞ்சலி

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



உலகத் திருக்குறள் பேரவை 10-02-2010 அன்று சென்னையில் அண்ணா அறிவாலயத்தில்
திருக்குறள் பேரொளி விருது வழங்கியபோது

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2049	மாதம் : வைகாசி - ஆவணி
மலர் : 32	இதழ் : 5 - 8

அணையா விளக்கு!

சாமானியராகப் பிறந்து சாமானியராக வாழ்ந்து, ஏமாற்றங்களில் வாழ்ந்த சாமானிய மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை நிகழ்த்த ஒரு மகத்தான மனிதர் உதித்து எழுந்தார்! அந்த மனிதருக்குக் காலம் தந்த பெயர்தான் "முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்"!

"வளைவதற்கு என்று பிறந்ததுதான் நாணல்!
வந்து மணப்பதற்கு என்று பிறந்தவைதான் மலர்கள்!
நெளிவதற்கு என்று பிறந்தவைதான் சாலைகள்!
நீண்டு உயர்வதற்கு என்று பிறந்தவைதான் மரங்கள்!
தமிழினத்தின் உயர்வுக்கு என்று பிறந்தவர்தான்
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்!"

கடைக்கோடி மக்களுக்காக, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஆதரவற்ற மக்களுக்காக அண்ணாவின் இதயத்தை இரவலாய்ப் பெற்ற அந்த அன்பு இதயத்தின் துடிப்பு அடங்கி விட்டது.

முழு வயிறு காணாதார், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணாதார், வலியோரின் பகடைக் காய்களான ஓடப்பர், இவர்கள் எல்லாம் உயரப்பராய் மாறுவதற்கு என்று சதாசர்வகாலமும் சிந்தித்த சிந்தனையாளர் தம் சிந்தனையை நிறுத்திக் கொண்டார்!

கலைஞரின் முதல் சட்டமன்ற கன்னிப் பேச்சு நங்கவரம் பண்ணை விவசாயிகளுக்காகக் குரல் கொடுத்தது; நங்கவரம் பண்ணை விவசாயிகளுக்காக அகிம்சை வழியில் போராடியது; வானத்தை அண்ணாந்து பார்த்து ஏமாற்றத்தில் உழன்ற விவசாயிகளின் வாழ்வில் மாற்றங்கள் நிகழவேண்டும் என்பதில் உறுதியாகத் திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தினார்!

"உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குதான் மிஞ்சும்" என்ற நிலை மாற, இடைத்தரகர்களால் கொள்ளை போகும் விவசாய வாழ்வு நலம் பெற "உழவர் சந்தைத் திட்ட"த்தைக் கொண்டு வந்தார்.

கை ரிக்ஷா ஒழிப்பு, கண் ஒளி வழங்கும் திட்டம், குடிசை மாற்று வாரியங்கள் மூலம் குடிசைகளில் வாழ்ந்த ஏழை மக்களை அடுக்கு மாடிக்குடியிருப்புகளில் குடி அமரச் செய்தார்.

மக்கள் நலனுக்காகவே வாழ்ந்தவர், மக்கள் நலனில் கரைந்து போனார்.

நமது குன்றக்குடி ஆதீனத்தோடு நெருங்கிய நட்பும், அன்பும் கொண்டவர். நம் மகாசன்னிதானத்தோடு தமிழர் நலம் கருதி அவர் கொண்டிருந்த அன்பு எழுத்துக்களால் எழுதிக் காட்ட இயலாதது!

மகாசன்னிதானம் பரிபூரணமானபொழுது குன்றக்குடிக்கு ஓடோடி வந்து அஞ்சலி செலுத்தினார். மகாசன்னிதானத்தின் தமிழ்ப் பணிகளைத் தொடருமாறு நமக்கு ஆறுதல் கூறிச் சென்றார். நமக்கும் அவருக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு முதல், பிறைநிலா வளர்ந்து நிறை நிலா ஆவது போல் கடைசிநாள்வரை அன்பும் நட்பும் நாளும் வளர்ந்தது.

1997-இல் சிவகங்கையில் நடைபெற்ற முன்னாள் அமைச்சர் அமரர் தா. கிருஷ்ணன் அவர்களின் மணி விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் பங்கேற்றோம். விழாவில் கலைஞர்

அவர்கள் உரையாற்றும் பொழுது தென் மாவட்டத்தில் சாதிக் கலவரம் நடைபெற்ற பகுதிகளில் நாம் அமைதிப் பணியாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

தென்மாவட்ட சாதிக் கலவரப் பகுதிகளில் பயணம் செய்து அமைதிப் பணியாற்றினோம். அமைதி திரும்பியது. பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளுக்கு, கோரிக்கைகளுக்குச் சில தீர்வுகளாக முதல்வர் கலைஞர் அவர்களிடம் அறிக்கையாகத் தந்தோம்.. நமது அறிக்கையின் வாயிலாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தொகை கூடுதலாக வழங்கினார்.

கூரைகள் எரிந்து சேதமுற்ற வீடுகளுக்கு எரியாத மேற்கூரை கொண்ட வீடுகள் கட்ட ஆணையிட்டார். தென்மாவட்டக் கிராமங்களில் மக்கள் அனைவரும் சாதி வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையுடன் வாழ சமத்துவபுரக் குடியிருப்புகள் அமைக்கும் திட்டம் கருக் கொண்டு உருப் பெற்றது. தமிழகம் ஒட்டு மொத்தச் சமத்துவபுரமாக உருமாறியது!

தென் மாவட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்த நீதி அரசர் ரத்தினவேல் பாண்டியன் தலைமையில் தென் மாவட்ட மக்களின் மேம்பாட்டுக்கு, தொழில் வளர்ச்சிக்கு ஆணையம் அமைத்துத் தந்தார்.

கோவை மாவட்டக் கலவரங்களிலும் பணியாற்றி நாம் தந்த அறிக்கையின் வாயிலாக பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கினார். நீதி அரசர் கோகுல கிருஷ்ணன் தலைமையில் பாதிப்புகளை நேரில் கண்டறிந்து ஆய்வு செய்ய விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.

நமது திருவருட்பேரவை மூலம் (சர்வ சமய நல்லிணக்க அமைப்பு) சர்வ சமய நல்லிணக்கக் கூட்டங்கள் நடத்தி அமைதியும், நல்லிணக்கமும் நிலவும் சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

கோவை நல்லிணக்கப் பணிகள் ஆற்றியதற்காக "கோட்டை அமீர் விருது" என்ற விருதை நமக்கு வழங்க முதல்வர் கலைஞர் அவர்கள் பரிந்துரைத்திருந்தார். நமக்கு முன்பும், நம்மோடும் நல்லிணக்கப் பணிகள் ஆற்றிய பலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வழங்கும்படி அன்போடு நாம் கூறி மறுத்ததை ஏற்றுக் கொண்டார்.

வள்ளுவர்கோட்டத்தில் 2008ம்ஆண்டு "திருவள்ளுவர் விருது" நமக்கு அளிக்கப்பட்ட விழாவில்,

தமிழ்ப் பண்பாடு பாரம்பரியத்தின் அடையாளமாக சல்லிக்கட்டு – மஞ்சுவிரட்டு தமிழகத்தில் தடைசெய்யப்பட்ட நிலையில் உள்ளது. தமிழ்ப் பண்பாட்டிற்காக விழுப்புண்களையும், விருதுகளையும் ஒருசேர பெற்ற தாங்களே சல்லிக்கட்டு – மஞ்சுவிரட்டுத் தடையின்றி நடைபெற ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

சல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தடையை நீக்கவும், உச்சநீதிமன்ற ஆணைகளின் வழியாக, Tamilnadu Regulation of Jallikattu act 2009" நிறைவேற்றப்பட்டது. இதற்காக நாம் பலமுறை கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தோம். தொடர்ந்து கோரிக்கைகளை விடுக்கும் போதெல்லாம் அன்புடன் ஏற்றுக் கொண்டு சல்லிக்கட்டு தொடர்ந்து நடைபெற, "Tamilnadu Regulation of Jallikattu act 2009" வழியே தமிழ்நாட்டின் பாரம்பரிய பண்பாட்டு அடையாளம் அழிந்து விடாமல் காப்பாற்றினார்.

2005 இல் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முடக்கப்பட்டு ஏழை எளிய மக்களின் வங்கிச் சேமிப்புப் பணம் முடக்கப்பட்ட நிலையில் அழுது தவித்து கொண்டிருந்தனர். கலைஞர் அவர்கள் 2006 இல் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் நாம் விடுத்த கோரிக்கையை ஏற்று சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை உடனடியாகத் திறக்க ஆணையிட்டு

94/1

சிவகங்கை மாவட்ட அடித்தட்டு ஏழை மக்களின் கண்ணீரைத் துடைத்தார்.

தமிழக இந்து சமய அறநிலையத்துறையில் உயர்மட்ட ஆலோசனைக்குழுவில் முதல்வர் கலைஞர் அவர்களுடன், மடாதிபதி மற்றும் ஆன்மீக அன்பர்கள் இடம்பெற்றிருந்தனர். அறநிலையத்துறையில் உயர்மட்டக்குழு மூலம் அனைவரின் ஆலோசனைகளையும் கவனமாகக் கேட்டு உரிய முடிவுகளை எடுத்தார்.

குறிப்பாக மத்திய அரசு 12வது நிதி ஆணையம் மூலம் 13வது நிதி ஆணையத்தின் நிதிஉதவிகள் பெற்று நூற்றுக்கணக்கான பழமையான புராதான திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடைபெற வழி வகை கண்டார். தமிழ்நாடு திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்களுக்கு வழங்கப்படும் தஸ்திக் அலவன்ஸ் என்ற இழப்பீட்டுத்தொகையை பழைய நிலையிலிருந்து 10 மடங்கு உயர்வு செய்து ஆணையிட்டார்.

தமிழ்நாடு திருக்கோயில்களில் தமிழ் அர்ச்சனை தடையின்றி நடைபெற வழிவகை கண்டார்.

சாதி வேறுபாடுகள் இன்றி தகுதியுடைய அனைவரும் அர்ச்சகர் ஆவதற்கு வழிவகை காண மாண்புமிகு நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை சார்பில் தருமபுரம் ஆதீன குருமகாசந்நிதானம் நம் அடிகள் பெருமான் மற்றும் மடாதிபதிகள் பலர் பங்கேற்று கலைஞர் அவர்களுக்கு நடத்திய பாராட்டுவிழாவில்,

“கடவுளை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என்பதை விட கடவுள் நம்மை ஏற்றுக்கொள்கின்றாரா? என்பது தான் முக்கியம்.

கடவுள் நம்மை ஏற்றுக்கொள்ளும் வழியில் நாம் நடை போடவேண்டும். கடவுள் ஏழைகளின் புன்னகையில் இருக்கின்றார். அந்தப் புன்னகையில் கடவுளைக் காண துடிப்பவன் நான்!" என்று கலைஞர் குறிப்பிட்டவாறு செயல்பட்டார்.

தேனார் தீந்தமிழ் திருக்குறளுக்கு உயிர் ஓவியமாய் "குறள் ஓவியம்" தீட்டினார். வான்புகழ் வள்ளுவர் கோட்டம் எழுப்பி வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பிடித்தார். கன்னியாகுமரி கடற்கரை ஓரத்தில் உலகத்தின் எட்டாவது அதிசயமாய் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை எழுப்பி உலக சாதனைப் படைத்தார். உலகத் திருக்குறள் பேரவை 2000 ஜனவரி 9 அன்று திருச்சியில் நடத்திய திருக்குறள் மாநாட்டில் "திருக்குறள் முதல்வர்" என்ற விருது வழங்கி, திருக்குறளுக்கு கலைஞர் ஆற்றிய தொண்டிற்கு நன்றி தெரிவித்தோம்.

காயப்பட்டு, சேதப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்ட அருமைத் தமிழ்மொழியை செம்மொழிச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞருக்கே உண்டு.

தமிழுக்குச் செம்மொழிச் சிறப்புத் தேடித்தந்த முத்தமிழறிஞர் கலைஞருக்கு நற்றமிழ் வளர்த்த நான்மாடக் கூடலில் திருப்பனந்தாள் எஜமான் சுவாமிகள், பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார், நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன், நீதியரசர் கோகுல கிருஷ்ணன், கவிப்பேரரசு வைரமுத்து, முன்னாள் துணைவேந்தர் அனந்த கிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் இணைந்து "தங்க நெல்லிக்கனி" விருது வழங்கி நன்றி தெரிவித்தோம். அவ்விழாவில் தமிழின் செம்மொழிச் சிறப்புக்கு காரணம் செம்மொழிக்கான பண்புகள் : "தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, நடுவுநிலைமை, தாய்மைத்தன்மை, பிறமொழித் தாக்கமில்லா தனித் தன்மை, பண்பாட்டு கலை அறிவு பட்டறிவு வெளிப்பாடு, இலக்கிய வளம், உயர் சிந்தனை, கலை இலக்கிய

தனித்தன்மை, வெளிப்பாடு பங்களிப்பு மொழி கோட்பாடு என்ற 11 பண்புகள் தமிழ்மொழிக்கு இருக்கின்றன.

இவ்விழாவில் தமிழ் செம்மொழிச் சிறப்புக்குரிய 12 ஆவது பண்பாக கலைஞரைத் தமிழ்மொழி பெற்றிருப்பதே ஆகும் என்று நாம் கலைஞரைப் பாராட்டி மகிழ்ந்தோம்.

கோவையில் உலகச் செம்மொழி மாநாடு நடைபெற்ற சில மாதங்களுக்கு முன்பு உலகத் திருக்குறள் பேரவை சார்பாக சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு 10.02.2010 இல் "திருக்குறள் பேரொளி" என்ற விருது வழங்கி மகிழ்ந்தோம்.

"தந்தை பெரியாரின் பேரறிவாகி
அறிஞர் அண்ணாவின் அன்பு இதயமாகி
வள்ளுவமே வாழும் சுவாசக் காற்றாகி
எந்நாளும் தமிழ் இன உயர்வுக்காக
இமைப்பொழுதும் சோர்விலாது உழைக்கின்றார்
முப்பாலில் மூழ்கி எழுந்ததில்
முகிழ்ந்த நன்முத்து குறளோவியம்!
அமிழ்ந்த குமரிக் கண்டத்தின்
அறிவுச் செல்வங்கள் அனைத்தும்
ஒருசேர மீண்டு எழுந்தது போல்
முக்கடல் சங்கமிக்கும் குமரிக் கடலில் எழுந்து நிற்பது
முப்பாலைத் தந்த திருவள்ளுவர் திருவுருவச் சிலை!
திருக்குறளுக்கு எண்ணற்ற உரைகள்!
எண்ணம், எழுத்து, பேச்சு, செயல்
என எல்லாவற்றிலும் வான்புகழ் வள்ளுவரை
வரலாற்றின் வரலாறாய்ச் செதுக்கிப் பதிவு செய்தது
கலைஞரின் "உரைகள்"

வான்புகழ் வள்ளுவத்தை வையகம் போற்றச் செய்யும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களைப் போற்றிப் பாராட்டும் விழா!

வாரீர்! வாரீர்!"

என்று நாமே கைப்பட எழுதிய கடிதத்துடன் "திருக்குறள் பேரொளி" என்ற விருது வழங்கும் விழா அழைப்பிதழில்

"முரசொலி திக்கெட்டினிலும் முழங்கச் செய்து
முத்தமிழும் வளர்ப்பதனால் **பாண் டியனே** யானாய்;
அரசுக்கட் டிலில் அமர்ந்து கண்ண கிக்கு
அரியசிலை நிறுவியதால் **சேரன்** ஆனாய்;
உரைசால்பூம் புகார்நகர்போல் மீட்டு மங்கே
உருவாக்கம் செய்தமையால் **சோழன்** ஆனாய்;
திருநிறைசெந் தமிழ்நாட்டின் முதல்வ ரான
சிறப்பதனால் **மூவரினும் மேலோ னானாய்!**

என்ற ஆதீனப் புலவர் மரு. பரமகுரு பாராட்டுக் கவிதை வரிகள் மூலம் கலைஞருக்கு சூட்டிய கவிதை, கவிதை உலகில் மணிமுடியாய் விளங்குகின்றது.

கலைஞர் அவர்களோடு எத்தனை எத்தனை மேடை நிகழ்வுகள்! நூல் வெளியீடுகள்! கலைஞர் அவர்களோடு கலந்து கொண்ட எந்த மேடை நிகழ்ச்சியாயினும் துளியளவு கூட அரசியல் கலவாத மேடை நாகரீகம் தான் கலைஞர் அவர்களின் மேடை நாகரீகம்!

கலைஞர் அவர்கள் பண்பாட்டின் உறைவிடம்! காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அண்ணா நூற்றாண்டு விழாவில் "பெரியார் விருது" ஆசிரியர் வீரமணி அவர்களுக்கும், "அண்ணா விருது" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், "கலைஞர் விருது" நமக்கும், "பாவேந்தர் பாரதிதாசன் விருது" வா.செ. குழந்தைசாமி அவர்களுக்கும் வழங்கினார்கள். உலகத்

தமிழர்களின் ஒப்பற்ற விருதாய் கலைஞர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

பூமியில் புதைந்து கொண்ட தாய் தன் இரு கரங்களையும் உயர்த்தி தன் குழந்தையைக் காப்பாற்றியது போல, தமிழ்ச் சமுதாயத்தை இமைப்பொழுதும் சோர்விலாது காப்பாற்றிய கலைஞர் தம் விழிகளை மூடிவிட்டார். நம்மால் நம்ப முடியவில்லை. போராளிகள் மரணம் வரை தான் போராடுவார்கள். தம் மரணத்திற்குப் பின்னும் போராடிய போராளி கலைஞர் ஒருவர் மட்டும்தான்.

போராளிகள் புதைக்கப்படுவதில்லை, விதைக்கப் படுகின்றார்கள். ஆம்! கலைஞர் மறைந்து விட்டார். கோடிக்கணக்கான மக்களின் மனங்களில் நிறைந்து விட்டார். கடைக்கோடி மக்களின் கண்ணீரைத் துடைக்கும் கருணையின் கரமாய் எப்பொழுதும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அரியாசனங்கள் அறியாசனங்களால் வரலாம்! போகலாம்! கலைஞர் அவர்கள் ஏந்திப் பிடித்திருந்த கொள்கைச் சாசனத்தை காலம் என்றும் மறுதலிக்க இயலாது.

திருக்குவளையில் ஏற்றப்பட்ட தீபஒளி உலகம் முழுமைக்கும் அணையா விளக்காய்ச் சுடர் விட்டுப் பிரகாசித்து ஒளி காட்டிக் கொண்டிருக்கிறது.

அத்தீப ஒளியின் வெளிச்சத்தில் அனைவரும் நடைபோடுவோம். அதுவே கலைஞருக்குச் செய்கின்ற உண்மையான புகழஞ்சலி!

வாழ்க! கலைஞர் புகழ்!
வளர்க! அவர்தம் தொண்டு!

* * * * *

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

பிரிவிலாத இன்னருள்!

அறிவி லாத எனைப் புகுந்து ஆண்டுகொண்டு
அறிவதை அருளிமேல்
நெறியெ லாம் புல மாக்கிய எந்தையைப்
பந்தனை அறுப்பானைப்
பிறவி லாத இன் னருள்கள் பெற் றிருந்துமா
றாடுதி பிண நெஞ்சே!
கிறியே லாம் மிகக் கீழ்ப்படுத் தாய் கெடுத்
தாய் என்னைக் கெடுமாறே!

(திருச்சதகம்-36)

"மாணிக்கவாசகர் அறிவால் சிவமேயானவர்" என்று கூறுவது மரபு. ஆயினும் மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகப் பாடல்களில் தம்மை "அறியாதவன்" என்றும் "அன்பில்லாதவன்" என்றும் திரும்பத் திரும்பக் கூறுகின்றார். நல்ல நன்செய்யில் மருதாம்புப் பயிரே பயிர்போல் இருக்கும். மாணிக்கவாசகரின் பழுத்த மனத்தில் பிறந்து வெளிவந்த திருவாசகப் பாடல்களின் சொற்கள் அன்பில் நனைந்தவை; கல்லைப் பிசைந்து கனியாக்கும் தன்மையவை. மாணிக்கவாசகரின் உடலில் - இதயத்தில் பெருமான் எழுந்தருளினார். "என்றன் உடலிடம் கொண்டாய் நான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே!" என்று அருளியிருப்பது உணர்க.

பிறவி - துன்பமா? இன்பமா? பிறவி துன்பமாவதும் இன்பமாவதும பிறவியைப் பயன்படுத்துவாரைப் பொருத்தது. பொதுவாக மனிதன், வாழ்வாங்கு வாழ்ந்தால் பிறவியை இன்பமாக்கலாம்; இன்பமாக அனுபவிக்கலாம். அதனாலன்றோ "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்றார் அப்பரடிகள். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!" என்றருளினார் திருமூலர். ஆனால், இன்பம் விழைவதும் இடும்பையை ஏற்க ஒருமைப்படாமையும் வாழ்வியல் அல்ல. நன்றும் தீதும் ஒப்பக் கருதும் பாங்குதான் வாழ்வின் சிறப்பு. இத்தகு வாழ்வில் இன்பம்

அமையும்; பிறவி இன்பமாகக் கழியும். ஆனால், அந்த இன்பத்தில் மூழ்கிப் போகாமல் வாழ்ந்தால் பிறவி துன்பமாகாது; பிறவி சுமையாகவும் இருக்காது. ஆனால் எத்தனை பேர் இங்ஙனம் வாழ்பவர்கள்? கோடியில் ஒருவர்கூட இல்லை. "நான்", "எனது" என்ற செருக்கற்ற நிலை வாய்த்து வாழ்வோரைக் காண இயலவில்லை.

இன்று செருக்குடையோரே மிகுதி. தஞ்சாவூர்ப் பொம்மையைப் போல ஆட்டம் போடுகின்றனர்; பாழ்படுத்துகின்றனர். "பாழ்த்த பிறவி" என்றார் மாணிக்கவாசகர். காரணங்கள் சீராக அமையின் காரியங்களும் சீராக அமையும். இன்று பலர் காரணங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. காரணமின்றியே வெறுக்கின்றனர்; பகை வளர்க்கின்றனர். உழாத நிலத்தில் களை மண்டுதல் போல அன்பால் உழாத நெஞ்சுடையராதலால் தீமையே நினைக்கின்றனர், தீமையே செய்கின்றனர். தம்முடைய செயல்கள் துன்பமாக விளையும்; பிறவியைத் துன்பமாக்கும் என்பதை அறிவதில்லை. மூர்க்கராதலால் சான்றோர் சொல்லும் வார்த்தையைச் செவிகொடுத்துக் கேட்பதில்லை.

பிறவிக்குரிய காரணங்கள கெட்டால் பிறவியும் கெடும். சித்த விகாரங்கள் சுட்டெரிக்கப்பட்டால் பிறவிக் காடும் அழியும். சின்னத்தனமான காரியங்கள் செய்தல், வெறுப்பனவே செய்தல் கூடாது. சிறுமையும் வெறுமையும் பிறவிக்குக் காரணங்கள். வெறுப்பனவே செய்யும் பிறவி "சீமைக்கருவை"யைப் போல வெட்ட வெட்ட தளிர்க்கும். இழி செயல் செய்வோரின் பிறவி தொடரும். அந்த ஆன்மாக்களின் இச்சையின்றியே தொடரும். பிறவி தொடர முயற்சிகள் வேண்டாம். இறைவனிடத்தில்கூட விண்ணப்பிக்க வேண்டாம். தாமே தொடரும்.

பிறவி நன்றாக அமையவும் இன்பமாக வந்து பொருந்தவும் ஆன்மா, இறைவனிடம் கேட்டுத்தான் அவனுடைய அருளிப்பாட்டுடன்தான் பிறக்க இயலும். ஆதலால், கெட்ட பிறவியை வேரும் வேரடி மண்ணுமாகக் களையவேண்டும், சீமைக் கருவையைத் தோண்டுவது போல! "பிறவியை வேரறுப்பவன் இறைவன்" என்று திருவாசகம் கூறும்.

பிறவிக்கும் காரணம் பாசம்; அவா. "அவா தவாஅப்பிறப்பீனும் வித்து" என்றது வள்ளுவம். இளையான்குடி மாறனார் கீரை பிடுங்கிய காட்சியைப் "பாசப் பழிமுதல் பறிப்பார் போல" என்று சேக்கிழார் கூறினார். பிறவி ஓடவேண்டுமாயின் அல்லது பிறவி இன்பமுடையதாக

வேண்டுமாயின் ஆசைகளை அகற்றுதல் வேண்டும். பாசத்தை விடுதல் வேண்டும். வாழ்க்கையை ஆட்டிப் படைத்து அவலப்படுத்துவன, ஆபாசங்கள். இந்த ஆசைக்கும் பாசத்துக்கும் காரணம் அறியாமை. அறியாமை என்பது பலர் கூறுவதுபோல ஒன்றும் தெரியாமை அல்ல. நல்லதைக் கெட்டதாகவும் கெட்டதை நல்லதாகவும் முறைபிறழ அறிந்து கொள்ளுதலே அறியாமை.

இருள், பொருளைக் காட்டாது. ஒரோவழி காட்டினாலும் உள்ளவாறு காட்டாது. இதுபோல அறியாமை ஆன்மாவைப் பற்றிய இருள். இது ஆன்மாவுக்கு நல்லன காண, நல்லன கேட்க வாய்ப்பளிக்காது; வாய்ப்பளிக்காதது மட்டுமல்ல – தடுக்கும். இந்த அளவில் அந்த இருள் – அறியாமை நின்றால் பரவாயில்லை. தீச்செயல்களைச் செய்யத் தூண்டும்; துணை போகும். அத்தீச் செயல்கள் பிறவிக்கு வித்தாக அமைந்துவிடும். பிறவியின் நோக்கம் செயல். ஆனால் அச்செயல் – வினை இருள்சேர் இருவினையாக அமையாமல் ஒளி சேர் வினையாக, வாசனையாக அமையாத செயலாக – வினையாக அமைதல் வேண்டும்.

பிறவியின் நோக்கம் இருளை அகற்றுதல். இருள்சேர் இருவினையிலிருந்து விடுதலை பெறுதல்; குறைவிலிருந்து நீங்கி நிறைவைப் பெறுதல்; குற்றங்களின்றும் விடுதலை பெறுதல்; குற்றங்களை நீக்கிக் குணங்களைக் கொள்ளல்; சிந்தையிலும் செயலுறுப்புகளிலும் பூட்டப்பெற்றுள்ள விலங்குகளை உடைத்து விடுதலை பெறுதல்; பரிபூரணனுக்கு அடிமையாதல் முதலியனவாகும். இப்படிப் பிறவியின் நோக்கம் நிறைவேற, முதலில் அறியாமையிலிருந்து விடுதலை பெறுதல் வேண்டும். அறியாமை அகலுதலைத் "தெளிதல்" என்று தேவாரம் கூறும்.

"சிந்தையுள் தெளிவுமாகித் தெளிவினும் சிவமுமாகி" என்று அப்பரடிகளும், "தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்!" என்று இளங்கோவடிகளும் அருளியுள்ளமை உணரத்தக்கன. துன்பங்களிலிருந்தும் துன்பத் தொடக்குகளிலிருந்தும் அறவே விலக வேண்டுமானால் இறைவனின் திருவருள் தேவை.

அறியாமையில் கட்டுண்டு கிடக்கும் ஆன்மா, இறைவனைத் தேடாது. தேடினாலும் அவன் அகப்படுவதில்லை. ஆதலால்

கருணையுடைய இறைவன் உயிர்க்குயிராகப் புகுந்து நின்றருளி ஆட்கொள்கின்றவன். இறைவன் ஆன்மாவினுள் உயிர்க்குயிரதாக எழுந்தருள்வது, இருள் கடிந்து எழுகின்ற ஞாயிறு போன்றது. அறியாமையின் பாற்பட்டு சாக்கை நனைத்துத் தூக்குமாப் போலே வினைகள், செயல்கள் பலவற்றைச் செய்து கொண்டும் அவ்வினைகள், செயல்களின் ஈட்டல்கள் - இழப்புக்கள், இன்பம் - துன்பம் ஆகிய உணர்வுகளில் சிக்கிக் கொண்டும் மத்துறு தயிர்போலச் சுழன்று வினையாகவே ஆகிக் கிடக்கும் பொழுது - ஆன்மபோதத்தில் திளைக்கும்போது இறைவன் ஆன்மாவின் விருப்பம் அறியாமல் அவனே புகுந்து ஆட்கொள்ளுதல் இயல்பு - கருணை.

அறியாதார் மாட்டு அறிவுடையோர் வெறுப்புக் கொள்ளலாகாது. அன்போடு பழகி, அறிவு தருதல் வேண்டும். மாணிக்கவாசகர் தம்மை அறிவிலாதவர் என்று கூறிக்கொள்ளும் இடங்கள் பலப்பல. அறிய வேண்டுவனவற்றை அறிதலே அறிவுடைமை. பலருக்கு உலகம் தெரியும். ஆனால், அவர்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. இத்தகையோருக்குத் தெரிந்ததெல்லாம் சுயநலம் தான். அதுவும் நிர்வாணமான சுயநலம். வெறுப்பனவே செய்யும் வாழ்க்கைப் போக்கு. இத்தகைய வாழ்க்கைப் போக்கு மாறவேண்டுமாயின் அறியவேண்டியதை அறிதல் வேண்டும். ஆன்மாக்கள் அறிய வேண்டியதை அறியுமாறு செய்து அருள்பாலிக்கவே இறைவன் சிவன் எம்பிரான் ஆலமர் செல்வனாக எழுந்தருளி அறிவித்து உணர்த்துகின்றான்.

விடுதலை பெறுதல் வீடு. வீட்டினை "வானோர்க்கு உயர்ந்த உலகம்" என்று திருக்குறள் கூறும். வானுலகம் பதவிகள் உலகம். பதவிகளும் மனிதனை மயக்குவனவேயாம். பதவிகள் மனிதர்களைப் பைத்தியமாக்கிவிடும். வீடு பற்றிய அறிவினை உணர்த்தினான் திருப்பெருந்துறை சிவன். மாணிக்கவாசகருக்கு இறைவன் "மேல் நெறியெலாம் புலமாக்கிய" பண்பினை வியந்து பாடுகின்றார்; பரவுகின்றார். வெட்ப தட்பம், பயம் முதலியனவற்றிலிருந்து விடுதலை தந்து பாதுகாப்புத் தருவது மண்ணகத்து வீடு. அதுபோல ஆன்மா, ஆணவ வெப்பத்திலிருந்து விடுதலை பெற்று மாசில் வீணையாக, மாலை மதியமாக, வீசு தென்றலாக, இளவேனிலாக விளங்கும் இறைவன் திருவடிகளில் தங்கிப் பாதுகாப்புப் பெறுதல் வீடு. இந்த வீடு பற்றிய அறிவினை, உணர்வினை, அனுபவத்தினை மாணிக்கவாசகருக்குத்

திருப்பெருந்துறையுறை சிவன் அருளிச் செய்தனன். இறைவனைத் தாயிற் சிறந்த தயாவுடையான் என்று போற்றும் மாணிக்கவாசகர், அறிவு தந்து ஆட்கொண்டு அருளிய இறைவனை – சிவனை – "எந்தை" என்று போற்றுகின்றார். அறிவு தரும் பொறுப்பும் கடமையும் தந்தைக்கே உண்டு என்பதால் இங்ஙனம் கூறினார்.

அறியாமை அகன்று விட்டது. இருள்சேர் இருவினையும் இல்லை. என்றும் பிரிவிலா அருளும் கிடைத்துவிட்டது. ஆயினும் வேம்பு தின்ற புழுப்போல, எலும்பு கடித்த நாய்போல மீண்டும் ஆன்மாவின் நெஞ்சு கீழ்மை நோக்கியே அழைத்துச் செல்ல விரும்புகிறது. நெஞ்சு போராடுகிறது. ஆன்மாவின் நலத்துடன் ஆன்மாவின் விருப்பத்திற்கு மாறாக நெஞ்சு மாறுபடுகின்றது. தன்னுடன் மாறுபட்டு நின்று போராடும் நெஞ்சை, திருஞானசம்பந்தர் சரிக்கட்டித் தன் வழிக்கு அழைக்க முயற்சி செய்து வெற்றி பெற்றார்.

"நீ நாளும் நினைவாய் நன் நெஞ்சே
சா நாளும் வாழ் நாளும் யாரறி வார்"

"நெஞ்சைத் தன் வசம் வைத்துக்கொள்வது அவசியம். நெஞ்சு எங்கும் செல்லும்; எதையும் சொல்லும்; எதையும் செய்யும். பதைத்துருகும் பாழ் நெஞ்சம். "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே!" என்று ஏசுவார் மாணிக்கவாசகர். இன்று மிகமிக மோசமான மனிதர்கள்கூட, உமி குற்றிக் கை ஓய்வாதல்போல வாழ்கிறவர்கள்கூட, பயனற்ற வாழ்க்கையைச் சுமந்து திரிபவர்கள்கூடத் தாம் தாம் வாழ்வதாகத்தான் எண்ணுகின்றனர். ஆனால், அவர்கள் வாழ்வது உண்மையல்ல. அவர்கள் நடத்துவது வாழாத வாழ்க்கையேயாம். பயனற்றனவெல்லாம் இருந்தும் பயனில்லை, இறந்தாலும் பயனில்லை என்பது திரண்ட கருத்து.

மாணிக்கவாசகர் தமது நெஞ்சத்துக்கு ஆசைகளைக் காட்டித் தம்பால் அணைத்துக்கொள்ள முயன்று வெற்றி பெற்றுவிட்டார் என்பதைத் திருவாசகம் உணர்த்துகிறது. இறைவன் – சிவன் வலியவந்து இம்மண் புகுந்து குருந்தமரத்தடியில் காத்திருந்து ஆட்கொண்டான். நெஞ்சமே! அவனுடைய திருவடிகளைச் சிந்தனை செய்! திருவருட் சிந்தனையுடன் திருப்பெருந்துறையுறை சிவனிடம் உனக்கு வேண்டியதை இரந்துகேள். திருப்பெருந்துறை சிவன் நீ கேட்கும் எல்லாவற்றையும் தருவான். திருப்பெருந்துறையுறை சிவன் பெருங்கருணையுடையவன் என்று தமது நெஞ்சை திருப்பெருந்துறையுறை சிவனிடம் ஆற்றுப்படுத்துகின்றார்.

தமது நெஞ்சத்தினை இரந்து கேட்கின்றார் மாணிக்கவாசகர். ஆணவத்துடன் தொடக்குண்டு ஆன்ம போத நிலையில் விளங்கிய ஆன்மாவின் பொறி, புலன்களைச் சிவத்தன்மையுடையதாக்கிய திருப்பெருந்துறை இறைவனை – என்றும் பிரியாதிருந்தருள் செய்வானை வாயாரப் பேசு என்று கேட்டுக் கொள்கின்றார்.

"ஏ, நெஞ்சே! வேதங்கள் – பழமறைகள் ஐயா! ஐயா! என்று தேடியும் சிவம் என்னும் செம்பொருளைக் கண்டபாடில்லை! அந்த வேதங்களுக்கெல்லாம் நாயகனாகவும் வேதங்களையெல்லாம் கற்றறிந்தவனாகவும் விளங்கும் நான்முகனும் கண்டதில்லை. செல்வத்தின் தலைவன் திருமாலும் கண்டதில்லை. இறைவனை அறிவினாலும் பணத்தினாலும் காண இயலாது. இங்ஙனம் நான்மறைகளாலும் நான்முகனாலும் திருமாலாலும் காண இயலாத இறைவன் எளியேனை ஆண்டு கொண்டருளினர். ஆண்டு கொண்டருளியதுடன் தொண்டனாகவும் கொண்டருளிய அருளிப்பாட்டை என்னென்பது" அன்பு காட்டினால் போதாது; அருள் செய்தால் போதாது. வேலை – தொண்டு செய்யப் பணித்தால்தான் உறவு ஆழம்படும்; உறுதிப்படும் என்று பேசுகிறார். "கூவிப் பணி கொள்" என்றும், "எது எமைப் பணி கொள்ளுமாறு அது கேட்போம்" என்றும் அருளியுள்ளமையைக் கற்றுத் தெளிக.

தொண்டு செய்ய ஒருப்படுமின்! தொண்டராக விளங்குமின்! இறைவன், திருப்பெருந்துறையுறை சிவன் ஆட்கொண்டருளியதுடன் தொண்டனாகவும் கொண்டருளியதற்கு ஏது கைம்மாறு? இல்லை, இல்லை! அதனால் கைம்மாறு உண்டோ என்று நெஞ்சை நோக்கிக் கேட்கின்றார். நெஞ்சு, "இல்லை இதற்கு ஓர் கைம்மாறு" என்று கூறுகிறது.

கீழ்மையே செய்து கெடுக்கும் நெஞ்சத்தினை மாணிக்கவாசகர் தன் வசப்படுத்திக் கொண்டு திருப்பெருந்துறையுறை சிவன் புகழ் பாடும்படி செய்தது புகழ்மிக்க செயல்.

திருவாசகம் ஓதுதல் மூலம் நாளும் நமது நெஞ்சத்தைத் திருத்துவோம்! நம் வசப்படுத்துவோம்! இறைவன் புகழ்பாடிப் பரவுவோம். தொண்டு செய்வோம்! நம்மைச் சிவமாக்கி ஆட்கொண்டருளும் மாணிக்கவாசகர் திருவடித் தாமரைகள் போற்றி! அறிவு தந்து ஆட்கொண்டருளிய அற்புதத்தைப் போற்றுவோம்.

(தொடரும்)

சொந்த ஒளி கொண்ட சூரியர்!

(சொல்லின் செல்வர். சுகி. சிவம்)

ஓர் அதிசய சூரியன். இந்தியாவின் வரைபடத்திலே இந்த ஊர் எங்கிருக்கிறது என்றே பலரும் அறியாத ஒரு குக்கிராமத்தை உலகமே திரும்பிப் பார்க்க வைத்த உன்னதம்... அவர். துக்ளக் இதழ் எழுதியது: "யார் யாரோ பெரிய புரட்சி செய்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள். இவரது புரட்சி எல்லாக் கிராமங்களுக்கும் வழிகாட்டக் கூடியது" - யார் அவர்? "அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய ஆனால் செய்யத் தவறிய வேலையை ஒரு மடம் செய்துள்ளது. இதே மாதிரியான ஆர்வமும் அக்கறையும் மற்ற மடாதிபதிகளுக்குத் தங்களைச் சுற்றி உள்ள ஊர்களின் மீது இருந்தால், அமைச்சர்கள், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் ஆகியோருக்குத் தங்கள் தொகுதி மீது இருந்தால், முதல்வருக்குத் தன் மாநிலம் மீது இருந்தால் எவ்வளவு மாற்றங்கள் நிகழமுடியும்?" என்று தினமணி அவரைப் பாராட்டி எழுதியது. யார் அவர்?

அவர் ஒரு மடாதிபதி. சமூக சீர்திருத்தவாதி. மிகச் சிறந்த பேச்சாளர், ரஷியப் பயணம் மேற்கொண்ட சமயவாதி... கூட்டுறவுத் தொழிற்சாலைகளை ஊர்முழுவதும் ஏற்படுத்திய தொழில்வள முன்னோடி... தன் கிராமத்திற்குள் சாராயக்கடையை யாருமே ஏலம் எடுக்காதபடி தடுத்த சாதனையாளர், சமத்துவவாதி. யார் அவர்? இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இந்தியத் திட்டக்குழுச் செயலருக்கு எழுதிய குறிப்பில் இவரது கிராமத்திற்குச் சென்று இவரது கிராம முன்னேற்றத் திட்டம் பற்றி உணர்ந்து சகல கிராமங்களுக்கும் அதை நடைமுறைப்படுத்த ஆலோசிக்கும்படி எழுதி இருந்தார். யார் அவர்? குன்றக்குடி தெய்வசிகாமணி அருணாலச்சல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்று சமய உலகும், குன்றக்குடி அடிகளார் என்று சகலரும அழைத்த, பெருமை மனிதர் அவர்.

மண்டைக்காட்டில் இந்துக்களும் கிறித்தவர்களும் மண்டையை உடைத்துக்கொண்ட போது, கிறித்தவப் பேராயரை உடன் அழைத்துக் கொண்டு கிராமம் தோறும் சென்று சமரசம் செய்வித்த சாதனையாளர். மீனவர்களை ஒடுக்க மீன்களை வாங்க மறுத்த போராட்டத்தின் போது தமது கைகளில் மீன்களை எடுத்துப் பிடித்துக் கூவி ஏலம் போட்டு,

சண்டையை நிறுத்திய சமரச வள்ளல். ஒவ்வொரு கோயிலுக்கும் உறுப்பினர்கள் அமைத்து செயற்குழு போல அறங்காவலர்களைத் தேர்ந்தெடுக்கச் சொன்ன சிந்தனையாளர். குடிகளைத் தழுவிய கோயில்... கோயில்களைத் தழுவிய குடிகள் என்ற கொள்கை முழக்கமிட்டவர். "ஆலயங்கள் கட்டுவதைக் கொஞ்சம் குறைத்துவிட்டு தொழிற்சாலைகள் கட்ட வேண்டும். இளைஞர்களுக்கான சமுதாயப் பாதுகாப்பு வேலைவாய்ப்பு தருவதே" என்று பேசிய காவியுடை காரல்மார்க்ஸ் அடிகளார். வள்ளுவர் காலத்தில் சொல்லப்பட்ட பஞ்சமாபாதங்களின் இடத்தை, குடி, சோதிடம், திரையரங்கு, வட்டிக்கடை, பரிசுச்சீட்டு ஆகியவை பிடித்துவிட்டன. எனவே இவை ஐந்தாலும் பாதிக்கப்படாத கிராமங்களை உருவாக்குவேன் என்று முழங்கி குன்றக்குடியை அவர் தமது முழு ஆளுமையில் வைத்திருந்தார். சமயவாதியாக வந்தாலும் சமூக அக்கறையே அவரது வாழ்வானது மடங்களில் புழக்கத்தில் இருந்த ஜாதிவாரியான பந்தி முறை ஒழித்து சமபந்தி போஜனத்தைத் தமது பட்டமேற்ற நாள் தொடங்கி நடைமுறைப்படுத்தினார். பொது மேடைகளில் நிகழும் பட்டிமன்றங்களைப் பொழுதுபோக்குக் கூடமாக்காமல் பழுது நீக்கும் பணிமனைகளாகத் தரம் உயர்த்தியவர் குன்றக்குடி அடிகளார். கண்ணப்பநாயனார் குருபூஜை என்றால் கண்தானம் கண்ணாடி தானம் நடத்துங்கள் என்பார். தண்டியடிகள் குருபூஜை அன்று, கண்பார்வையற்ற நாயனார் திருவாரூர் குளம் தோண்டிய நினைவாக, திருக்குளங்களைத் தூர்வார வேண்டும் என்பார். அதிசயபுருஷர். அருள்நெறி அபூர்வர். அவர் ஒரு சுயம்பு. அடிகளார் பற்றிய Ph.D ஆய்வு செய்து பா. சுந்தர் ஓர் அற்புதமான புத்தகம் எழுதி இருக்கிறார்.

– சொல்லின் செல்வர் திரு. சுகி. சிவம் எழுதி "தினமணி" 07.08.2018 இளைஞர்மணி இதழில் வெளிவந்த "சொந்த ஒளிகொண்ட சூரியர்கள்" என்ற கட்டுரையிலிருந்து.

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை நரகம், நம்பிக்கையின்மையே ஒழுக்கக் கேடுகளுக்குக் காரணம், நம்பிக்கை இல்லாத வாழ்க்கை வெறும் சூன்யம், நம்பிக்கை நமக்கு உடைமை, ஒளி. நம்பிக்கையே அறிவுக்கு வழித்தடம்; நம்பிக்கையே முயற்சிகள் சாதனை செய்யும் களம்; நம்பிக்கையே மருந்தும் மந்திரமுமாகும்.

– அருள்நெறித் தந்தை

குன்றக்குடியில்
அருள்நெறித்தந்தை
தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமான்
அவதாரத் திருநாள் விழா

தமிழ்நாடு அரசு கொண்டாடியது

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் அவதாரத் திருநாளை அரசு விழாவாகக் கொண்டாட தமிழக அரசு அண்மையில் ஆணை பிறப்பித்தது. அதன்படி தொடக்கவிழா 17.7.2018 செவ்வாய்க்கிழமை தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் 94-ஆவது அவதாரத் திருநாளையொட்டி, குன்றக்குடியில் தமிழ்நாடு நிறுவிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபத்தில் நடைபெற்றது. மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச்சிலைக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் க. லதா அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

பின்பு, சிவகங்கை மக்களவை உறுப்பினர் பி.ஆர்.செந்தில்நாதன் அவர்கள் திருப்புத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், குன்றக்குடி ஆதீனம் 46-ஆவது திருவருள்திரு குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல தேசிய பரமாச்சாரிய சுவாமிகள், ஆகியோர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமான் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

அதன்பின் மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியை ஆட்சியரும் விழாவில் கலந்துகொண்ட மற்ற அனைவரும் கண்டு மகிழ்ந்தனர்.

இவ்விழாவில் மாவட்ட அரசு அலுவலர்கள் பலரும், நூற்றுக்கும் மேற்பட்ட அன்பர்கள், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

மணிமண்டபத்திற்குச் செல்லுமுன் தவத்திரு பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருமடத்திற்கு முன் அமைந்துள்ள அருள்நெறித்தந்தை அருளாலயத்திற்கு விருந்தினர்கள் அனைவரையும் அழைத்துச் சென்று வழிபாடு செய்து வைத்தார்கள்.

கிருங்கை சேதுபதி என்னும் முனைவர்.சொ. சேதுபதிக்கு
சாகித்திய அகாதெமியின்

பாலசாகித்திய விருது




கிருங்கை சேதுபதி இந்த ஆண்டு சாகித்திய அகாதெமியின் பாலசாகிதத்தியவிருது பெற்றிருப்பது அறிந்து "மக்கள் சிந்தனை" பெரிதும் மகிழ்கிறது. பாராட்டி வாழ்த்துகிறது.

திரு. கிருங்கை சேதுபதி நாடறிந்த சிறந்த இலக்கியச் சொற்பொழிவாளர்; எழுத்தாளர்; நல்ல கவிஞர். ஒரே இரவில் 180 பக்கம் கொண்ட ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதி முடித்த ஆற்றல் உடையவர். இனிய பண்பாளர். கவிதை, கட்டுரை, கதைகள் என 70 புத்தகங்களுக்கு மேல் எழுதிக் குவித்த இலக்கியச் செல்வர். எல்லாவற்றுக்கும் மேலாக நம் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் இலக்கியப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு பங்கெடுத்து வருபவர். இலக்கிய அமைப்புகள், அருள் நிறுவனங்கள் பலவற்றில் பாராட்டுகளும், விருதுகளும், பட்டங்களும் பெற்ற பெருமையாளர். சாகித்திய அகாதெமியின் பாலசாகித்திய விருது பெற்றுள்ள தகைமையாளரான திரு. சேதுபதியை "மக்கள் சிந்தனை" உளமாரப் பாராட்டி - வாழ்த்தி மகிழ்கிறது.

– ஆசிரியர்

எண்ணிப்பார்க்கிறோம்... மனிதர்கள் நாட்டில் விலங்குகளை வளர்க்கிறார்கள். யானையிலிருந்து, நாயிலிருந்து, பூனையிலிருந்து எல்லா விலங்குகளும் மனிதர்களால் வளர்க்கப்படுகின்றன. தன்னை வளர்த்த, தன்னைப் பழக்கப்படுத்திய மனிதன் இல்லையென்றால், மறைந்துவிட்டால் அவன் பிரிவின் துயரை எண்ணி விலங்குகள் கண்ணீர் வடிக்கின்றன. யானை தன்னுடைய பாகன் இறந்துவிட்டால், அன்றைக்கு வேறு யாரும் உணவு தந்தால் அந்த உணவை ஏற்பதில்லை. ஆனால் மனிதர்கள் மாத்திரம்தான் எளிதாக உறவுகளை மாற்றிக்கொள்கிறார்கள்... எளிதாக இவர்களால் மட்டும்தான் உறவுகளை மாற்றிக்கொளள முடிகிறது.

– அருள்நெறித் தந்தை.



வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் நூல் வெளியிடுபவர்
தருமையாதீன சின்னப் பண்டார சந்நிதி
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்மந்த சுவாமிகள்
நூல் பெறுபவர் : தேசிய நல்லாசிரியர் புலவர் சி.சண்முகானந்தம்
தண்டபாணி சுவாமிகளின் மகள்வழி பேரன்
இடம் - பாளையங்கோட்டை, 27.01.2018

கலைஞர் எப்போதும் ஏதாவது புதுமையாகச் செய்வதில் ஆர்வமுடையவர்! விரைந்து முடிவெடுப்பார். முடிவெடுப்பதைத் துணிவுடன் செயலாற்றுவார். ஆற்றல்மிக்க பேச்சாளர்! அண்ணாவின் அடிச்சுவட்டில் "உடன் பிறப்பு"களுக்கு மடல் எழுதி, நிலைமாறா அணி சேர்த்து வைத்துள்ளார். இவர் நம்மிடம் காட்டிய பரிவுக்குத் தமிழார்வம் மட்டுமே காரணம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தக்கார் ஒருவர் கலைஞரிடம் "அடிகளாரை நாம்தான் விரும்புகிறோம். ஆனால் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார். அவருடைய ஆதரவு முழுவதும் காங்கிரஸுக்கு அல்லது கம்யூனிஸ்ட் கட்சிக்குத்தான்..." என்று கூறியுள்ளார். இதற்குக் கலைஞர், "நாம் அடிகளாரை ஆதரிப்பது கட்சிக்காக அல்ல... தமிழுக்காக!" என்று பதில் கூறியுள்ளார். கலைஞருக்கு நல்ல நினைவாற்றல் உண்டு. கலைஞரின் தமிழார்வம் பாராட்டி மகிழத்தக்கது.

- அருள்நெறித்தந்தை

மண்ணும் - மனிதர்களும் பக்கம் - 147

சேக்கிழார் கண்ட மனுநீதிச்சோழன்

(முனைவர். சரளா இராசகோபாலன்)

மனுநீதிச் சோழன் கதை சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்னதாகவே சோழ நாட்டில் வழங்கப்பட்ட கதையாக உள்ளது. சோழ நாட்டவர்கள் தங்கள் நாட்டின் நீதியைப் பறைசாற்ற இக்கதையைப் பயன்படுத்தியுள்ளனர். சோழநாட்டைச் சேர்ந்த கண்ணகி, பாண்டியன் அவைக்களத்தில் நின்று, தன்நாட்டவரின் நீதிமுறையை – செங்கோல் திறத்தைப் பேசும் நிலையில்,

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வன் ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே" (சிலம்பு : வழக்குரை)

என்று கூறினாள். சிலப்பதிகாரத்திற்குப் பிறகு தேவார முதலிகள் பாடவில்லை. திருத்தொண்டத் தொகையிலும் திருத்தொண்டர் திருவந்தாதியிலும் மனுநீதிச் சோழன் பற்றிய செய்திகள் கூறப்படவில்லை. ஆனால் சேக்கிழார் சோழர்களின் பெருமையைப் பேசும் மனுநீதிச் சோழனின் வாழ்வில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியைக் கூறவே நகரச் சிறப்பை எழுதினார்.

திருவாரூர்க் கோயிலில் வீதிவிடங்கன் சன்னதியில் இரண்டாம் திருச்சுற்றில் வடபுறச் சுவர்களில் விக்கிரம சோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி.1123) ஒரு கல்வெட்டு வெட்டப்பட்டது. இது சிவபெருமானே மனுநீதியின் வரலாற்றைக் கூறுவது போல அமைந்துள்ளது. விக்கிரமசோழன் காலத்தில் இக்கதை வழங்கப்பட்டிருக்க வேண்டும். அறச்சிந்தனையுடைய சோழ அரசர்கள் சிறந்த அறவோனாகக் கருதப்பட்ட மனுவைப் போற்றியுள்ளார். அறவோராகிய சேக்கிழாரும் மனுவைப் போற்றியுள்ளார் என்று, அ.ச.ஞானசம்பந்தனார், குறித்துள்ளார். (பெரியபுராணம்–ஓர் ஆய்வு.ப.303).

பெரியபுராணத்தின் பாட்டுடைத் தலைவர் சுந்தரர் தலைவியாகிய பரவையார் தோன்றிய இடம் திருவாரூர். பெரியபுராணம் தோன்றுவதற்குக் காரணமாகிய திருத்தொண்டத் தொகையும் திருவாரூரில் பாடப்பட்டது. அன்பர்களுக்கு எளியவனாகிய இறைவன்

தம்பிரான் தோழராகப் பரவையார் வீட்டிற்குத் தூதாகச் சென்றதும் திருவாரூரில்தான். தமிழகத்தை ஆண்ட அரசர்களில் சோழ அரசர்கள், சைவ சமயத்தை மட்டுமே சார்ந்தவர்களாக இருந்தனர். திருத்தொண்டத் தொகையில் சோழநாட்டைச் சேர்ந்த சிவபக்தர்களே அதிகமாக உள்ளனர். நன்றியுணர்வுடைய சேக்கிழாரும் சோழ அரசரிடத்தில் அமைச்சராக இருந்தவர். எனவேதான் நகரப்படலத்தில் திருவாரூரைப் பாட வாய்ப்பாகக் கொண்டார். நீதிமுறையில் செங்கோலாட்சி புரிந்த சோழர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த மனுநீதிச்சோழனின் வரலாற்றைக் கூறுவதில் மகிழ்ச்சி கொண்டார். நகரப்படலத்தை 50 பாடல்களில் பாடிய சேக்கிழார், 38 பாடல்களில் மனுநீதிச் சோழனின் கதையை விளக்கியுள்ளார். சேக்கிழார் இவ்வரலாற்றைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

1. சேக்கிழார் சோழநாட்டின் அமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் அநபாய சோழனின் அமைச்சராகத் தொண்டாற்றியவர். அநபாய சோழன் செங்கோலாட்சி புரிவதற்குக் காரணம் அவன் வழிமுதலாக விளங்கிய மனுநீதிச் சோழனே என்று நினைத்தார்.

"மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னும் மாமணிப் பூண்மனு வேந்தனே" (13)

என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

2. மன்னன் என்பவன் உயிர்களுக்குத் தொண்டு புரிவதையும் காப்பதையும் கடமை என உணர்ந்தவனாக இருத்தல் வேண்டும் என்று நினைத்தார் சேக்கிழார். இதை மனுநீதிச்சோழன் மூலமாக உணர்த்தினார்.

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெல்லாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெரு காவலான் (14)

என்று மனுநீதிச் சோழனை அறிமுகப்படுத்தும்போது கூறினார். மனுமன்னன் அமைச்சருக்கு அறிவுரை சொன்னபோதும் உயிர்களைக் காக்கும் காவலில் தன்னால், தன் மக்களால், கள்வரால், பகைவரால், மற்ற உயிர்களால் வரும் துன்பங்களைக் காப்பவனே காவலன் என்று இலக்கணம் கூறினான்.

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால்உயிர் கள்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்தறங் காப்பான் அல்லனோ" (36)

என்று மனு அறங்கூறினான். மனுவின் மூலம் சோழநாட்டு அரசன், சிறந்த காவலனாக விளங்க வழிவகுத்தார் சேக்கிழார்.

3. தொண்டு செய்ய முற்படுபவன், தொண்டை ஏற்கும் உயிர்களுள் உயர்திணை, அஃறிணை வேறுபாடு காட்டக்கூடாது என நினைத்தார் சேக்கிழார். தொண்டர் நாயகனாகிய சிவபெருமான் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் சிலந்திக்கும் யானைக்கும் அருள்புரிந்தவன் அல்லவா? மனுநீதி என்னும் காவலனின் காவலுக்குரிய உயிர்களுள் மாடும் மனிதனும் ஒன்றே என நிலைநாட்டும் முறையில் மனுநீதிச்சோழன் வரலாறு காட்டப்பட்டுள்ளது. கன்றை இழந்த தாய்ப்பசுவும் தன் ஒரே தவமகனை இழக்க விரும்பும் தானும் ஒன்றே என நினைத்தான். உடலுக்கு வேறுபாடு உண்டு. உயிருக்கு வேறுபாடு இல்லை அல்லவா?

4. இறைவனின் அருளையும் செயற்கரும் செயல் செய்யும் ஆற்றலையும் அறிவுறுத்தச் சேக்கிழார், இக்கதையைப் பயன்படுத்திக் கொண்டார். மகன் மார்பில் தேர்ச் சக்கரத்தைச் செலுத்திக் கொன்ற நிலையைக் கண்டு,

"சடை மருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும் முன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்" (46)

என்று இறைவனின் அருள் கூறப்பட்டுள்ளது. உயிர் பிரிந்த ஆண் கன்று. அரசன் மன்னுரிமைத் தனிக்கன்று. மந்திரி ஆகியோரை எழுப்பும் அருட்செயலும் கூறப்பட்டுள்ளது.

5. சேக்கிழார் திருத்தொண்டர்களின் பெருமையையும் இறைவனின் அளப்பரும் அருளையும் விளக்கவே திருத்தொண்டர் புராணத்தைப் படைத்தார். நாயன்மார்களுக்கு இறைவன் கொடுக்கப்போகும் சோதனைகளையும் வேதனைகளையும் அவற்றை வென்று வாகை சூடும் வீரத்தொண்டர்களையும் உலகுக்கு வெளிப்படுத்த விரும்பிய சேக்கிழார், சிவபக்தனாகிய மனுநீதிச் சோழனுக்கு ஏற்படும் சோதனைகளையும் அவன் அவற்றை வென்று வாகைசூடும் நிலையில் மற்ற நாயன்மார்களுக்கு முன்னோடியாகத் திகழும் நிலையையும் எடுத்துக் காட்டினார்.

6. தொல்தமிழரின் அறநெறி யாது? திருக்குறள் அதனைச் சுட்டியுள்ளது.

"அறிவினால் ஆகுவதுண்டோ? பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை" (குறள்.315)

பிற உயிர்கள் படும் துன்பத்தைப் போக்க முயல்வதும், அது இயலாத நிலையில் அதைத் தானும் ஏற்றுக்கொண்டு அனுபவித்தலும் செய்வதே ஒருவன் அறிவு பெற்றதன் பயனாகும். ஒருவன் தனக்கு நோய் வந்தால், அதைத் தீர்க்க முயல்வான். இயலவில்லை எனில் நோயின் கொடுமைகளை அனுபவித்து இறப்பான். அதேபோலப் பிற உயிர் படும் துன்பத்தை நீக்க முடியவில்லையென்றால், அவ்வுயிர் படும் துன்பத்தைத் தானும் அனுபவிக்க வேண்டும். மனுநீதிச்சோழனின் வரலாற்றில் "பிறிது" என்ற பசுவைக் காக்கவேண்டிய பொறுப்பு மன்னனைச் சேர்ந்தது. அந்தப் பசுவின் துன்பத்தை நீக்க முடியாத நிலையில் "இது, தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே கருமம்" என்று தமிழர்களின் அறநெறியை மேற்கொண்டான்.

தொல் பழஞ் சமயமாகிய சைவசமய நெறி நிற்பவர்களுக்கு எல்லா உயிர்களும் ஒன்றுதான். அனைத்துடம்புகளும் இறைவன் உறையும் கோயில்கள்தாம்.

"உறைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம்
நிறைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே
நின்றான்" (திருமுறை 1:132:4)

என்பது தேவாரம். அதனால் எல்லா உயிர்களிலும் அரச குமாரனாயினும் பசுங்கன்றாயினும் இறைவன் உறைகின்றான் என்று சைவ சமயம் கூறியதை மன்னன் மதித்தான், செயல்படுத்தினான்.

8. *"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
உயிர்செகுத்து உண்ணாமை நன்று" (குறள். 259)

என்பது தமிழர்களின் அறநெறி. வைதிகர்களைப் பொறுத்தமட்டில் மனிதன் உயர்ந்தவன். அவனுடைய நன்மை தீமைகட்கு ஏனைய விலங்குகள் பலியிடத் தகுதி வாய்ந்தவை. மனிதன் எந்தத் தவறு செய்தாலும் தப்பித்துக் கொள்ளலாம். "பிராயச்சித்தம் செய்துவிட்டால் பாவம் போய்விடும்" என்று நினைத்தனர். இந்நெறியைத் தமிழ் மக்களிடையே பரப்பினர். தேர்க்காலில் பசுவைக் கொன்ற பழியைப் போக்கக் கருதிய மன்னன் மகன்,

"வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமே ஆகில்" (26)

என நினைத்தான். அதனால் திருமறையவர் முன் சென்றான். அமைச்சரும் "அந்தணர்கள் விதித்த முறை வழி நிறுத்தல் அறம்" என்றார். (34) மேலும் மறைமொழிந்த அறம்புரிதல், தொன்று தொடும் நெறியன்றோ" (35) என வற்புறுத்திப் பேசினார். மன்னனோ "குழக்கன்றை இழந்து அலறும் கோவுறு நோய்க்குப் பிராயச்சித்தம் மருந்தென்றான்". "பசு உற்ற துன்பத்தை மன்னனாகிய தானும் அடைதலே அறம்" என்றான்.

வைதிக நெறி கூறும் வழியில் செல்பவர்கட்கும், பழைய அறநெறியில் செல்பவர்கட்கும் இடையே நடந்த போராட்டத்தை அறிவிப்பதே மனுநீதி சோழனின் வரலாறு. மனிதன் எந்தத் தவறு செய்தாலும் தப்பித்துக் கொள்ளலாம். கழுவாய் தேடிக் கொள்ளலாம் என்ற கருத்தை வலுவிழக்கச் செய்யச் சேக்கிழார் மனுநீதிச் சோழன் வரலாற்றைப் புகுத்தியுள்ளார் எனலாம்.

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

சிந்தனை!

(முனைவர்.கடவூர். மணிமாறன்)

சிந்தனை இல்லார் வாழ்வில்
சிறப்பினை எய்தார்; நந்தம்
முந்தையர் நெறியை முற்றும்
முடக்கிட நினைப்போ ரெல்லாம்
வெந்திறல் அறியார்; வீணே
வெற்றுரை பிதற்றி வெல்லும்
மந்திரம் அறியா ராகி
மாட்சியைத் தொலைத்து நிற்பர்!

அறநெறி செழிப்ப தற்கே
அனைவரும் உழைப்பா ராயின்
சிறப்புகள் குவியும்; எங்கும்
சீர்மையும் தொடரும்; இந்தப்
பிறப்பிலே உலகம் உய்யப்
பெரும்பணி ஆற்று வோரே
இறப்பிலாப் பேற்றைக் காண்பர்
ஈடிலாப் புகழைக் கொள்வர்!

செப்பரும் இனிய வாழ்வில்
சிந்தனை இல்லா மாந்தர்
உப்பிலா உணவைப் போல்வர்
உறுபயன் விளைக்க எண்ணார்;
கப்பிய இருளை ஒப்பர்
கருத்தினை மனத்தில் ஏலார்;
ஒப்பிலா மாந்த ருக்கே
உயரிய நோக்கு வேண்டும்!

நெறியினில் நடப்போம்; என்றும்
நேரிய வழியில் செல்வோம்;
அறிவியல் கருத்தை ஏற்போம்;
அகத்தினில் தூய்மை காப்போம்
வெறியினை விலக்கி ஆன்றோர்
விழுமியம் அனைத்தும் போற்றி
வறியவர் துயரம் நீக்கி
வாழ்வியல் ஒளிரச் செய்வோம்

— — — — — — — —



தமிழுக்குச் செம்மொழி பெருமை தந்த கலைஞருக்கு மதுரையில் முத்தமிழ்ச்சங்கம் நடத்திய
பாராட்டு விழாவில் தங்கநெல்லிக்கனி விருது வழங்கியபோது



திருக்குறள் பேரொளி விருது வழங்கும் விழா - ஓவியக் கண்காட்சியை பார்வையிட்ட போது



சென்னையில் மீண்டும் கண்ணகி சிலை நிறுவிய போது



குன்றக்குடி திருமடத்தில்
குருமகா சந்நிதானம்
அவர்களை சந்தித்து
நலம் விசாரிக்க
வருகைதந்த போது



சங்கநிதி பதுமநிதி ஒரு சிந்தனை

(தருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

"சங்கநிதி பதுமநிதி" இரண்டுந்தந்து
தரணியொடு வானாளத் தருவாரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே.

இத்திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்தில் வந்துள்ள, சங்கநிதி, பதுமநிதி, என்ற இரண்டுமே நமது இனிய சிந்தனைக்குரியன.

இவ்விரண்டிற்கும் தருமையாதீன உரையாசிரியர் கூறுவன.

I. சங்கநிதி – சங்குவடிவாகக் குவிக்கப்பட்ட நிதி; பதுமநிதி – தாமரை வடிவாகக் குவிக்கப்பட்ட நிதி. இனி சங்கம், பதுமம் என்பன சிலபேரெண்கள் எனவும் கூறுப. இந்நிதிகள் குபேரனிடத்துள்ளன எனவும், அவற்றில் இருந்து எத்துணைப் பொருள் கொள்ளினும் அதனாற் குறையாது முன்னையளவில் நிரம்பி நிற்கும் தெய்வத்தன்மை உடையன எனவும் சொல்லுப – என்பது குறிப்புரை.

II. **அபிதான சிந்தாமணி ஆசிரியர் கூறுவன :**

சங்கநிதி – சங்கின் வடிவினதாகிய நிதி; இது குபேரனிடம் உள்ளது. கேட்டதைத் தரும் வலியுளது. பதும நிதி – தாமரை வடிவினதாகிய நிதி; பாற்கடலில் தோன்றிய பொருள்களில் இதுவும் ஒன்று. இவை இரண்டும் அபிதான சிந்தாமணியர் குறிப்பாகும்.

III. **மயிலை சீனி வேங்கடசாமியார் ஆய்வுச்சிந்தனை**

பாரத நாட்டுக் காவியப்புலவர்கள் செல்வத்தைக் கற்பனை செய்தார்கள்.

கோடி X கோடி கொண்ட எண்ணுக்குச் "சங்கம்" என்பது பெயர்.

அதாவது கோடி, 10 கோடி, நூறு கோடி, ஆயிரங் கோடி, இலட்ச கோடி, பத்துலட்ச கோடி, சங்கம் என்பது பெயர். இதை எண்ணும் எழுதும்போது ஒன்றுடன் 14 சுன்னம் சேர்த்து எழுதவேண்டும்; 100000000000000: இவ்வளவு எண்ணிக்கையுள்ள செல்வத்துக்குச் "சங்கநிதி" என்பது பெயர்; இதற்குச் சங்கின் உருவத்தைக் காட்டி எழுதுவார்கள்.

தக்கயாகப் பரணியில், "கொண்டகோடி" என்ற தமிழிசைப் பாடலில் உரையாசிரியர், "கொண்டகோடி" என்பதற்கு, ஒரு கோடி ஒன்றாகக் கொண்டு, எண்ணப்பட்டு, ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், நூறாயிரம், பத்து நூறாயிரம், கோடி என்றவாறு – என உரை கூறுவார்.

கோடி X கோடி X கோடி X கோடி X கோடி கொண்ட எண்ணுக்குப் "பதுமம்" என்பது பெயர். இந்த எண் 36 இடங்களைக் கொண்டது. இதை எண்ணால் எழுதவேண்டுமானால், ஒன்றுடன் முப்பத்தைந்து சுன்னம் சேர்த்து எழுத வேண்டும். 100000000000000000000000000000000000/- இவ்வளவு எண்ணிக்கையுள்ள செல்வத்துக்குப் "பதுமநிதி" என்று பெயர் கூறுவார்கள். இதற்குத் தாமரைப்பூவின் உருவத்தை அமைத்துக் காட்டுவார்கள்.

நவகோடி நாராயணர், கோடீஸ்வரன் என்ற பெயர்கள் தமிழ்நாட்டில் இன்று வழங்கி வருகின்றன. சங்கநிதி, பதுமநிதிகளைப் புராணங்களிலும், காவியங்களிலும் காணலாம். சக்கரவர்த்திகள் உலகத்திலே எப்பொழுதோ ஒருமுறை அரிதாகத் தோன்றுகிறார்கள் என்பதும், அவர்கள் சக்கரச் செல்வம் படைத்தவர்கள் என்பதும், செல்வம் படைத்த அவர்களிடத்திலே சங்கநிதிகள், பதுமநிதிகள் இருந்தன என்பதும் காவியப்புலவர்களின் கற்பனை.

சூளாமணி காவியத்தில், திவிட்டன் என்னும் சக்கரவர்த்தியிடம் சங்கநிதி பதுமநிதிகள் இருந்தன என்று மூன்று பாடல்கள் கூறுகின்றன. அவற்றுள் ஒன்று ;

"சென்றுயர் வலம்புரி செம்பொற்றாமரை
என்றியல்பேரின இரண்டுமாநிதி
ஒன்றல் மணிகளும் ஒண்பொருள் மாழையும்
நின்றிவை சொரிந்தொளி நிழற்று கின்றவே"

இவ்வாறு சங்கநிதி பதுமநிதிகளைக் கற்பனை செய்த காவியப் புலவர்கள் அம்மட்டும் நின்றுவிடவில்லை. இந்த நிதிகள் உயிரற்ற வெறும் சடப்பொருள்கள் தானே. இந்த நிதிகளுக்கு அதிபதியாகத் தெய்வங்களைக் கற்பித்தார்கள். சங்கநிதிக்கும், பதுமநிதிக்கும் இரண்டு பூதங்களைக் கற்பித்தார்கள். அந்தப் பூதங்களைக் குறள் உருவமாகவும், குடம் போன்றவயிறும், குறுகிய கைகால்களும், உடையனவாகவும் கற்பித்தனர்.

மேலும் இரண்டு நிதிகளுக்கும் பெருந்தலைவனாக "குபேரன்" என்னும் தெய்வத்தைக் கற்பித்தார்கள். குபேரன் என்றால் அழகில்லாதவன் என்பது பொருள்; பேரம் என்றால் உருவம் என்பது பொருள். குபேரன் என்றால் விகாரமான உருவமுடையவன் என்பது பொருள். குபேரனை "நிதியின் கிழவன்" - "சைவசிரவணன்" என்றும் கூறுவர். பௌத்தமதத்தார் குபேரனை "ஜம்பாலி" என்று கூறுவர். ஜம்பாலியின் கையில் கீரிப்பிள்ளையின் தோலினால் செய்யப்பட்ட பணப்பை உண்டு.

நிதியின் கிழவனை, அவன் விரும்பும் இடங்கட்குத் தூக்கிச் செல்ல ஒரு இயக்கனை ஊர்தியாகக் கற்பித்தார்கள். அந்த இயக்கனுடைய பெயர் "நரன்" என்பது. ஆகவே குபேரனுக்கு நரவாகனன் என்னும் பெயரும் உண்டு. குபேரன் திக்கு பாலகர்களில் ஒருவன்.

"இருநிதிக் கிழவன் இயக்கர் வேந்தன்
வடதிசைத் தலைவன் நரவாகனனே" என்று

பிங்கல நிகண்டு குபேரனைக் கூறுகிறது.

குபேரனுடைய நிதிகள் வளர்ந்துகொண்டே இருக்கின்றனவாம். நெல்வயலில் ஆண்டுதோறும் நெல்விளைவது போல, குபேரனுடைய தோட்டத்தில் சங்க நிதியும், பதுமநிதியும், விளைகின்ற கொடிகள் உள்ளனவாம். குபேரனுடைய தோட்டக் குளங்களில் சங்கநிதியும், பதுமநிதியும் வளர்ந்துகொண்டே இருக்கின்றனவாம். சங்கும் தாமரையும் நீரில் விளைகின்ற பொருள்கள் அல்லவா? இச்செய்திகள் தக்கயாகப் பரணியில் காளிக்குக் கூளி கூறியதில் (195) உள்ளன. நிதியின் கிழவனான குபேரன் சிவபெருமான் தோழனாக திருநாவுக்கரசர், "நிதியாளன் தோழனை" என்று திருப்பள்ளியின் முக்கூடல் தாண்டகத்தில் அடையாளப்படுத்துவார். பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஐயா தொகுத்த இச்செய்திகள் சங்கநிதி - பதுமநிதி பற்றி பேரளவு தெரிய வாய்ப்பிற்று. குறிப்புரை ஆசிரியர்களையும் மயிலை ஐயா அவர்களையும் போற்றி வணங்குவோமாக. "இரு நிதிகளையும் கோயில்கள்ில் சிற்பமாகக் கண்டு இன்றும் மகிழலாம்".

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – IX

(தமிழாகரர். தெ. முருகசாமி)

எந்த ஒரு மொழிக்கும் எழுத்தாலான சொல்தான் உடல், அந்த உடலுக்கான உயிர் போன்றது அச்சொல்லுக்கான பொருள். அப்பொருள்தான் – வெளிப்படை, குறிப்பு என்ற இருவேறு இலக்கண இலக்கியத் தரம் வாய்ந்தது. இது பற்றித் தொல்காப்பியர் கூறுகையில்,

தெரிபுவேறு நிலையிலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே!

என்றார். சொல்லதிகாரப் பெயரியல் 3 ஆம் நூற்பா கூறும் இப்பொருள் உணர்வால்தான் சொற்கள் பெயரென்றும் வினையென்றும் கண்டறியப்படும் நிலையில் மொழி வளர்கிறது.

இந்நிலையில் கண்டறியப்பட்ட பெயர்ச்சொல் பற்றிய பகுப்பில் உள்ள இயற்பெயர், சுட்டுப் பெயர்களின் இருப்பை விளக்குகிறது இக்கட்டுரை.

கண்ணகி, கோவலன் – இயற்பெயர்கள். குழந்தை பிறந்ததும் காரணம் கருதியோ, பேச்சு வழக்கில் இந்த இயற்பெயரைச் சுட்டிய பிறகே அவள், அவன் என்பதான சுட்டுப்பெயரைச் சுட்டி உரையாட வேண்டும் என்றும் செய்யுள் வழக்கில் சுட்டுப் பெயரை முந்தி கூறிப் பின்னர் இயற்பெயரைச் சுட்டலாம் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது. (கிளவியாக்கம் 38).

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கு ஒருங்கியலும் காலம் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழி என்மனார் புலவர்.

அடுத்து, "முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே" – (39) என்பதாகும்.

இச்செய்யுள் நடைமுறையைச் சிலம்பில் இளங்கோவடிகள் கண்ணகி கோவலன் அறிமுகத்தில் இலக்கணம் மாறாமல் கையாண்டுள்ளார்.

அவளுந்தான்,

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்என்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ!"

என்பது கண்ணகி பற்றிய அறிமுகமாகும். இதுபோலவே,

"அவனுந்தான்,
மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள் என்றிசை போக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான்"

எனக் கோவலனும் அறிமுகமாகின்றான்.

பொதுவாகச் செய்யுள் நடையில் சுட்டுப்பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வருவதென்பது ஏதோ ஒரு சிறப்பு நோக்கியே ஆகும் என்பதைத் தொல்காப்பியம் உணர்த்தவில்லையாயினும் சிலப்பதிகாரம் அதைப் புதியதோர் இலக்கியத்தரவாக (HYPOTHESIS) அதாவது நுட்பமான பொருள் உணர்தற்குரியதாக உணர்த்துகிறது எனலாம்.

ஏனெனில் தொல்காப்பியர் இச்சுட்டுப்பெயர் பற்றிய கருத்தாடலில் பொருளொடு புணரும் சுட்டு, பொருளொடு புணராச்சுட்டு என இரண்டாகக் கூறும் நிலையில் இரண்டும் ஒருபொருளையே உணர்த்தும் எனக் கூறினாராயினும் சுற்றி வளைத்த நிலையில் பொருளொடு புணராத சுட்டினும் நேரிடையாகப் பொருள் உணர்த்தும் பொருளொடு புணர்ந்த சுட்டே, உயர்வுடையதாக உணரப்படுவதால் இளங்கோவடிகள் கண்ணகியையும் கோவலனையும் முறையே அவள், அவன் என முன்னர்ச்சுட்டியது பொருளொடு பொருந்திய சிறப்புக்குரியது எனலாம்.

சிலப்பதிகாரத்திற்கு உரை கண்ட அரும்பத உரையாசிரியர் என்பார், "இவளை (கண்ணகியை) முற்கூறிற்று - கதைக்கு நாயகியாதலின்" என்றார். இதுபோலக் கோவலனை அவன் என முன்னர்ச் சுட்டியதற்கு எந்தக் காரணத்தையும் அவ்வுரைகாரர் கூறாதது சிந்தனைக்குரியதாகிறது.

கண்ணகி - கதாநாயகி என்றால் கோவலன் கதாநாயகன் என அனுமானமாக உணர்ந்தாலும் அங்ஙனம் உணர இடந்தராத நிலையில்

அரும்பத உரைகாரர் கண்ணகியை மட்டுமே சுட்டியதில் பொருளொடு புணர்ந்த சுட்டாக "அவள்" என்ற சொல் சிறப்பைப் பெறுகிறது.

இங்ஙனம் கூறியதால் அதாவது கதைக்கு நாயகி உண்டே தவிர நாயகன் இல்லை என்று அனுமானிக்கப்படுவதால் சிலப்பதிகாரக் காப்பியம், "பெண்ணியத்தை" உயர்த்த எழுந்த தலைமைப் பண்பைப் பெறுகிறது எனலாம். பொதுவாக எல்லோரும் கூறும் புரட்சிக்காப்பியம் என்பதற்கேற்ப எழுத்துலகத்தில் புதுமை படைத்த முதல் படைப்பாளராக இளங்கோவடிகள் பெருமை கொள்வதற்கும் அவர் சுட்டிய "அவள்" என்னும் பொருளொடு பொருந்திய சுட்டுச் சொல்லே காரணம் எனில் அது மிகையான கூற்றன்று எனலாம்.

இது உண்மையைச் சிலப்பதிகாரக் கதாபாத்திர அறிமுகத்தில் கோவலனை முன்னர்க் கூறாமல் பின்னர்க் கூறிய இளங்கோவடிகளின் மன உணர்வாலும் உணரமுடிகிறது.

இவ்வாறாகக் கோவலனின் தலைமைக் கதாநாயகப் பண்பைச் சுட்டா நிலையில் கண்ணகியின் நாயகிப் பண்பை முதலில் சுட்டியதால், "அவளுந்தான் கண்ணகி" என்ற சுட்டு, பொருளொடு புணர்ந்த சுட்டாகவும், "அவனுந்தான் கோவலன்" என்ற சுட்டு, பொருளொடு புணராச் சுட்டாகவும் உணர்வதைத் தொல்காப்பிய இலக்கணத்தின் வழி உணரமுடிகிறது எனலாம்.

மேலும் காப்பியப் பொருள் நிலையில் கண்ணகியும் கோவலனும் சேர்ந்து வாழ்ந்ததினும் பிரிந்து வாழ்ந்ததே பெரும்பகுதியான வாழ்க்கைக் காலம் என்பதால் அப்பிரிந்த வாழ்வில் கண்ணகியின் பண்பு உயர்ந்ததாகவும் கோவலனின் பண்பு கீழ்மையாயும் இருந்ததால் சுட்டி அறியப்பட வேண்டிய உடன்பாட்டிற்குரியவள் கண்ணகி என்பதும் எதிர்மறைக்குரியவன் கோவலன் என்பதும் தெளிவாகத் தெரிவதன் மூலமும் இளங்கோவடிகள் கண்ணகி கோவலன் இருவரையும் முறையே அவள், அவன் எனப் பொருளொடு புணர்ந்த சுட்டாலும் பொருளொடு புணராச் சுட்டாலும் அறிமுகம் செய்து காப்பியத்தை நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமாக மணக்கச் செய்தார் எனலாம்.

இப்பொருள் நுட்பத்தைக் கண்ணகி கோவலன் இருவரையும் அறிமுகப்படுத்தும் மற்றோர் உத்தியாலும் இளங்கோவடிகள் உணர்த்திக்

காட்டுவது மிகச் சிறப்பாக உள்ளது.

கண்ணகியைச் சுட்டும் அவளுந்தான் என்னும் சுட்டு, கண்ணகி என்பாள் மன்னோ – என்பதைச் சென்று சேர்ந்தாலும் அவளது அறிமுகத்தின் இடையில் "தீதிலா வடமீனின் திறம், இவள் திறம்" என்கிறார் இளங்கோ. இதனால் அவள், இவள், இவள்தான் கண்ணகி என உணருமாறுள்ளது. அதாவது அவள் என்ற சுட்டு இவள் என்ற சுட்டை அவாவி நின்று, பின்னர் கண்ணகி என்ற இயற்பெயரோடு இயைவதில் ஏதோ ஓர்சிறப்பு உள்ளதாக உணரமுடிகிறது.

அவள் – சேய்மைச் சுட்டு. இவள் அண்மைச் சுட்டு. காப்பிய அளவில் கண்ணகியின் கற்பு நிலை உயர்த்திப் பேசப்படுவதால் கவிக் கூற்றாக அமைந்த அவள் என்ற சுட்டினும் இவள் என்ற சுட்டு உயர்வடைகிறது.

உலக அளவில் பெண்ணியத்தின் உயர்குறியீடாகக் கண்ணகி பேசப்படுவதற்கான அடையாளமாய் அவளை அவள் என்றே சேய்மைச் சுட்டால் சுட்டினாலும், "தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்" என அருந்ததியின் கற்புக்குக் கண்ணகியின் கற்பு உவமையாகக் கூறப்படுவதன்மூலம் காப்பிய அளவில் மையப்படுத்திக் கூறும் கற்புடைப் பெண்டிருள் மாதவியின் கதாபாத்திர உரசலோடும் ஒப்பிட்டுணருமாறு உள்ளது எனலாம்.

ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி என வேட்டுவவரிக் காதையில் தெய்வமுற்றேறிய சாலினி கூறுதற்கேற்ப உலகளாவிய புகழ், கண்ணகிக்கு வரவுள்ளதால் அவளுந்தான் எனச் சேய்மைச் சுட்டால் இளங்கோவடிகள் கண்ணகியை அறிமுகப்படுத்தினாலும் தீதிலாக் கற்பு நிலையில் அருந்ததியும் மாதவியும் கண்ணகியோடு போட்டியிடும் நிலையில் ஒப்பிட்டுப் பார்க்கவைத்தே கண்ணகியை உயர்த்துகிறார் எனலாம். இங்ஙனம் உணரத் "தீதிலா" என்ற அடைமொழியே காரணம் ஆகும். கூறப்படும் அடைமொழி – பொருளொடு பொருந்துதற்காகக் கூறப்பட்டாலும் பொருளொடு புணராநிலையில் கருத்தின்றி மொழிவதாகவும் அமைதல் உண்டு. இந்தவாறாகத்தான் அருந்ததிக்குத் "தீதிலா" அமைகிறது.

அருந்ததியின் கற்பு – களங்கமில்லாதது. அதனால் அவ் அடைமொழியின் பொருட்குறிப்பு அருந்ததிக்குப் பொருந்தாதாயினும்

அவ்வடைமொழி – வாளா கூறப்பட்டதாகவே உணரலாம். இருப்பினும் கூறப்பட உண்மையே நுட்பமாக உணர்கையில் காப்பிய அளவில் கண்ணகியைப் போல் கற்புக்கு இணையாக மாதவியும் உள்ளதால் அவளது (மாதவியுடைய) கற்பு, கண்ணகிபோல் முழுமை இல்லாத நிலையில் முழுநிலவில் களங்கம் போன்ற குறிப்பை உணர்த்துவதாக உணரலாம்.

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்றமைந்த இல்லற மாண்பு, கண்ணகிக்கு அமைந்ததுபோல் மாதவிக்கு அமையவில்லை. மாதவியான "அவள்" கண்ணகியான இன்னொருத்தியின் கணவனை தெரியாமையாகவே கணவனாக ஏற்றுக்கொண்டவள், அதாவது தெரியாமலோ தெரிந்தோ கைவைத்தாலும் நெருப்பு சுடுமாறுபோல மாதவியானவள். இன்னொருத்தியின் கணவனைக் கணவனாக வரித்துக்கொண்ட களங்கம் அவள்மீது இல்லாமல் இல்லை என்பதால் சேய்மையில் உள்ள வானவீதியில் தெரியும் அருந்ததியைவிட அண்மையில் உள்ள மாதவியின் கற்பு கண்ணகியால் அளக்கப்படும் குறிப்பால் உணர்த்தும் நிலையிலேயே இளங்கோவடிகள் கற்பில் களங்கமில்லா அருந்ததிக்குத் "தீதிலா" என்ற அடைமொழியைப் பொருளற்றதாய்ப் புணர்த்திக் கூறினார் எனலாம்.

இங்ஙனம் மாதவியை நினைப்பிக்கும் முகமாகவே "தீதிலா" என்ற அடைமொழி கூறப்பட்டது என்பதைக் கோவலனின் அறிமுகச் சொற்களால் உணர்ந்து தெளியலாம்.

கோவலனைப் பலரும் "செவ்வேள்" எனக் கூறுவதாக இளங்கோ கூறுகிறார். இப்பெயர், முருகன் தெய்வயானையை மணந்ததும் வள்ளியை மணம் கொண்ட குறிப்பை உணர்த்துவது போலக் கண்ணகியும் மாதவியும் கோவலனுக்கு மனைவியர்களாக அமைகின்றனர்.

இப்படிக் கோவலனோடு மாதவியை நினைப்பிக்கச் செய்வது போலக் கண்ணகியின் களங்கமிலாக் கற்போடு இன்னொருத்தியின் கணவனைக் கணவனாகப் பெற்ற களங்கத்தோடு நினைப்பிக்கும் வீதமாகவே கண்ணகிக்கு இணையான அருந்ததியைச் சுட்டுவதன் அடைமொழி மூலம் ("தீதிலா") மாதவி காப்பியத்தின் தொடக்க நிலையிலேயே அறிமுகப்படுத்தப்படுகிறாள் என்பது குறிப்புப் பொருளான செய்யுள் நடை எனலாம்.

இன்னும் ஓர் கூடுதலான உணர்வால் கண்ணகி கோவலனை விட முன்னர்ச் சுட்டப்படவேண்டியவள் என்பதற்கு இவ்விருவரையும் அறிமுகப்படுத்தும்போது இளங்கோவடிகள் பயன்படுத்தும் ஒரு சொல்லாலும் பிரித்துணர முடிகிறது.

கோவலனை மாசாத்துவான் மகன் எனக் கூறியதுபோலக் கண்ணகியை மாநாய்கன் மகள் எனக் கூறாததைச் சிந்திக்க வேண்டியுள்ளது.

குடும்பத்தின் வாரிசு என்ற அளவிலேயே கோவலன் காணப்பட்டான். அவன், குலந்தரு வான்பொருளைத் தன் குலத்தொழிலுக்கேற்பப் பெருக்காமல் அழித்துவிட்டதாலேயே வாரிசு என்ற அளவில் உணரப்பட்டான். தன்குலத்தையோ குடியையோ உயர்த்தவில்லை.

ஆனால் கண்ணகியோ தன்குலத்திற்கும் குடிக்கும் வாரிசாகத் தோன்றினாலும் உலக அளவில் அவரவரும் தத்தம் மகளாகக் கொண்டாடும் நிலையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த குறிப்பிடத் தகுந்தவளாக இருந்ததால்தான், கவுந்தியடிகள், கண்ணகியைக் கற்புக் கடம்பூண்ட தெய்வம் என்றும் சேரமாதேவி "நம் அகன் நாடடைந்த இப் பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என்றும் இறுதியாக அசரீரி நிலையில் பாண்டியன் கண்ணகியைத் "தன் மகள்" என்றும் கூறும் அளவில் கயவாகு போன்ற வெளிநாட்டவரும் கொண்டாடும் தெய்வமானாள் என்பதால் குறுகிய குடும்ப எல்லைக்குள் மாநாய்கன் மகள் எனக் கூறாமல் விட்டது கண்ணகிக்கும் காப்பியத்துக்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்தது எனலாம்!

ஆக, தொல்காப்பியத்தின் வழி அவள், அவன் - சுட்டுக்கள், கண்ணகி கோவலன் என்ற இயற்பெயர்களைத் தொட்டுச் சுவைச் செய்யும் தீந்தமிழ்ச் சுட்டுக்களாக உள்ளதன்றோ!

★

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

— ஆசிரியர்

சாக்கோட்டை நாயனார்

(தமிழாகரர். தெ. முருகசாமி)

செந்தமிழ் பறக்கும் செட்டிநாட்டுச் சீமையில் நகரத்தார் வாழும் புதுவயலைச் சார்ந்த சாக்கோட்டை ஓர் சிற்றூராகும். இலக்கணப்படி ஒரு சிற்றூர் என்பதே முறையாயினும் அவ்வூரில் 28.05.2017ல் நடந்த ஓர் இன்றியமையாத சிறப்பால் ஓர் என்றதோர் ஒப்பற்ற அடைமொழி இட்டுரைக்கப்பட்டது.

தெய்வப் புலவர் சேக்கிழார் வாழ்ந்த காலத்தை நினைவு கூரத்தகும் வகையில், வாழும் சிவஞானக் கலாநிதியாம் புதுவயல் பழ. முத்தப்பனார் அவர்கள், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களால் வீரவன புராணம் என்ற தலபுராணம் பாடிச் சிறப்பித்த சாக்கோட்டையில் தம் 71ஆம் ஆண்டுப் பிறந்தநாள் பெருமங்கல விழாவை அடியார்கள் வழிபாடாகக் கொண்டாடியது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நகரத்தார் பெருமக்களுள் சிவபூசைச் செல்வர்கள் பலருண்டு. நால்வர் பிள்ளைத்தமிழ் பாடிய காரைக்குடி சொக்கலிங்க ஐயா, தேவகோட்டை வள்ளல் மேனா எனும் புகழ்விலாசம் கொண்ட மெய்யப்பச் செட்டியார், தத்புருஷ தேசிகர், தமிழ்க்கடல் இராய.சொ. போன்றோர் வரிசையில் வாழும் சிவபூசைச் செல்வராய்ப் புதுமை புதுக்கியவர் சித்தாந்த வீறுமிக்க தமிழாகரர் முனைவர் பழ. முத்தப்பனாராவார்.

பெரியபுராணத்தில் இளையான்குடி மாறநாயனார், நடுநிசியில் தமது இல்லம் வந்த சிவஅடியாரை வழிபாடு செய்து வரவேற்று அமுதளித்ததாகக் கூறும் சேக்கிழார் வாக்கை மெய்ப்பிக்கும் விதமாக 21 அடியார்களைத் தம் குடும்பத்தாருடன் வரவேற்று வழிபாடு செய்த சிவபூசையால் முத்தப்பனார் சாக்கோட்டையைச் சிவபூசைக் கோட்டையாகச் சாசனப்படுத்திவிட்டார் எனலாம்.

கொண்டு வந்து மனைப்பு குந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்

உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துளார்! (பெ.பு.இளை.4)

என்ற சேக்கிழார் வாக்கு, பாரதி கூறியது போல என் எழுத்தும் தெய்வம், என் எழுதுகோலும் தெய்வம் என்பதையே நினைப்பிக்கச் செய்வதாகும்.

மெய்கண்ட சாத்திரத்தின் சிவஞானபோத 12 ஆம் நூற்பாவின் கருத்துரை, பொழிப்புரை, பொருளுரை, விரிவுரை, விசேடவுரை எனப் பல உரைமாண்புகளின் சிறப்பைப் பயிற்சிப் பட்டறையாக ஆக்கிக் காட்டும் விதமாகச் சித்தாந்த ரத்தினம் பழ. முத்தப்பர் தம் குடும்பத்தாரோடு இல்லை இளையான்குடிமாறராக மாறி 21 அடியார்கட்கும் வழிபாடு நிகழ்த்தித் தம் குடும்பத்தின் 21 தலைமுறைக்கும் புண்ணியத்தைச் சேர்த்தார் என்பது சைவ உலகில் மாபெரும் புதுமையாகும். நகரத்தார்க்கன்றிப் பிறர்க்கும் வழிகாட்டுதலாக அமைந்த முதன்மையுடையதாகும்.

இப்படி அவர் திட்டமிட்டுச் செய்ய, இதற்கொரு முன்னோட்டமான நிகழ்வு இருந்ததே விதையான காரணமாகும்.

முருகன் புகழ்பாடும் முத்தமிழ் மயிலத்தின் தமிழ்க்கல்லூரியில் பணிபுரிந்தபோது (1970-89) தை மாதம் நடக்கும் படிவிழா சமயம் படிவிழாக்குழுத் தலைவர் மேலமங்கலம் சாது இராமதாசு சுவாமிகள் ஒருபகற்பொழுது உச்சிவேளை முத்தப்பர் இல்லத்திற்கு எழுந்தருளினார். மனைவி அழகம்மை ஆச்சியும் தாமுமாகச் சுவாமிகளை வரவேற்று அமுது செய்து பசியாறும்படி வேண்டிக்கொண்டபடி சுவாமிகள் அமுதுண்டு நிறைமனத்தோடு இருகைகளை உயர்த்தித் தம்பதியரை வாழ்த்தினார்கள். அந்த வாழ்த்தொலிதான் இன்று சாக்கோட்டையில் எதிரொலித்தது என்பதை நண்பர் முத்தப்பரின் நட்பு நிழலாய் உள்ள யான் நன்கறிவேன்.

அன்று சாது அவர்கட்கு அன்னமிட்ட தொண்டு என்றும் அறாத்தொண்டாகப் பலரை வாழவைத்தது என்பதையும் அறிவேன். சாது அவர்களின் வாழ்த்து விதை, விரிந்து பரந்து விருட்சமாகிவிட்டதன் அடையாளமாகவே சித்தாந்தச் செம்மணி பழ. முத்தப்பனார், சாக்கோட்டையில் கோவிலூர் ஆதீனம் சீர்வளர்சீர் மெய்யப்பஞான தேசிகசுவாமிகள் அருள்தலைமையில் 21 அடியார்கட்கும் வழிபாடு

நிகழ்த்திய சிறப்பு நிகழ்ச்சியாகும்.

செட்டிநாட்டில்தான் குழந்தைகளின் பிறந்த நாள் கொண்டாட்டத்தைப் "புதுமை" என்ற புண்ணியச் சொல்லால் கூறுவர். அப்புதுமை, முத்தப்பரின் 71-ஆம் ஆண்டுப் புதுமையாகப் புதுப்பொலிவு பெற்றது எனலாம்.

இதனை ஏற்றுப் போற்றும் விதமாகவே குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் தம் ஆதீனத்தின் சார்பில், ஆதீனக் கவிஞர் மரு. பரமகுரு மற்றும் ஆதீன நேர்முக உதவியாளர் செல்வராசு ஆகிய இருவர் மூலமாகச் சிறப்பைச் செய்தார்கள்.

ஆக, ஆதீனங்களால் தொடர்ந்து பாராட்டைப் பெறும் முனைவர் முத்தப்பர் புதுவிதமாக அடியார் சிவபூஜையைச் செய்துகாட்டிய புதுமையால் அவர் ஞானத் தமிழாகரரான சிறப்பில் "சாக்கோட்டை நாயனார்" ஆனார் எனலாம்! சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையின் தொகையடியாராம் "பத்தராய்ப் பணிவார்" என்பாருள் எண்ணத்தகவராகத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டதால் முத்தப்பர் சாக்கோட்டை நாயனார் என்றல் தகும்!

சாக்கோட்டை நாயனார்
என்ற சரித்திரத்தைப்
பாக்கோட்டை யான
புதுவயலாம் - பூக்கோட்டை
மண்ணின்நல் மைந்தராம்
முத்தப்பர் பெற்றாரே!
புண்ணிய பூசனையால்
பூத்து!

சுதந்திரம் என்றால் என்ன? மனிதனைச் சுதந்திரமாகச் சிந்திக்கவும், சிந்தித்துக் கண்ட முடிவுகளை அச்சமின்றி எடுத்துக் கூறவும், விருப்பத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்ப வேலைகளை எடுத்துக் கொள்ளவும், உழைக்கவும், உழைப்பின் பயனை முழுதாக அடையவும், விருப்பார்வங்கள் நிறைந்த வகையில் வாழவும் அனுமதிக்கப்படுவதே சுதந்திரம்.

– அருள்நெறித் தந்தை

சிறப்பாசிரியருக்கு கடிதம்....

சொல்வல்ல வேட்டுவர் - எழுத்துவல்ல வேட்டுவர் என்ற இரண்டிலும் பயணித்து எல்லோர்க்கும் அருள்வழங்கும் குருமூர்த்திகள் "மக்கள் சிந்தனையில்" (மார்ச் - மே - 2018 இதழ்) "தொண்டு நெறியே சைவநெறி" என்ற சென்னை மாநாட்டு அருளுரை - "தொண்டு செய்வாரவர்துயரிலரே" என்ற தமிழ்வேத வாக்கின் சூத்திரத்துக்கு அடியார்க்கு நல்லார் - அரும்பத உரைகள் போல் அமைந்துள்ளது என்று எண்ணி மகிழ்ந்தேன். "புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்" என்ற செயல்திறனை சாட்டை கொண்டு அடித்து "பசித்தவனுக்கு உணவாய், நோயுற்றவனுக்கு மருந்தாய் விளங்குகின்ற சமயநெறியைக் காப்போம்" என்ற அறநெறியைப் போதித்த குருவருள் வாழ்க!

"சிலம்பில் தொல்காப்பியப் பதிவு" வழங்கும் தமிழாகரர் ஐயா கட்டுரை தொடக்கம் முதல் இறுதிவரை "எழுத்தறியதீரும் இழிதகைமை - தீர்ந்தக்கால் மொழித்திறத்தின் முட்டறும்" வாய்ப்பு நல்கியது. "ஒருவர்" என்ற சொல்லை மாதொருபாகர்க்கு ஆகும் சொல்லாய்வு மிக உச்சம். பிறன் - பிறன் என்ற வார்த்தைகளைக் கொண்டு, இளங்கோவின், "பிறர்மனை அஞ்சுமின்" நீண்ட எடுத்துக்காட்டுகளோடு, பிறர்மனை விரும்பிய இலக்கியச் செய்தி முன்னை இலக்கியத்தில் - "தமிழில் இல்லை" என்ற செய்தி அரிய கண்டுபிடிப்பு: அதற்காக சிலம்பில் வரும் குரங்குமுகம் - வனசாரணி - இராவணன் - சூர்ப்பனகை அரிய எடுத்துக்காட்டு. "அவளிவணநல்லூர்" என்ற சிவத்தலத்துக்கு சம்பந்தர்பாடலில், அவன் என்ற ஆண்பாற் பெயர்க்கு, "அவளி" என்ற பெண்பாற் பெயரைப் பெய்து அம்பிகை அழகுடன் எழுந்தருளிய நல்லூர் என்று அருளிப்பாடு பெற்ற தலத்துக்கு கதைவேறு கூறினாலும், தமிழாகரர், பிறன், பிறள் என்று காட்டியது போல, அவனுக்கு அவளியைக் கூறலாம் என்பது எண்ணம். தமிழாகரர் ஆய்வு கற்றோர் அறியா அரிய ஆய்வு.

- தருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்

மக்கள் சிந்தனை மே 2018 இதழில் சென்னையில் நிகழ்ந்த தருமையாதீனம் ஐந்தாவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டு விழாவில் 11.03.2018 அன்று தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல

அடிகளார் அவர்கள் ஆற்றிய உரையைக் கண்டேன். அதில் அறநெறியின்படி வாழ்வதுதான் மனித சமூகத்தின் இயல்பு. தன்னலம்தான் மனித சமூகத்தைத் தவறானப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. நமது சமயம் அச்சத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது. அன்பின் அடித்தளத்தில் அறிவுக்கண் கொண்டு ஆய்வினை நிகழ்த்தியது; நம் சமய நெறி காலத்தால் தொன்மையானது. பழமைக்கும் பழமையானது. புதுமைக்கும் புதுமையானது. மனித குலத்திற்குச் செய்கின்ற தொண்டே கடவுளின் தொண்டு. பசித்தவனுக்கு உணவாய் நோயுற்றவனுக்கு மருந்தாய் விளங்குகின்ற சமய நெறியைக் காப்போம்!" என்ற கருத்துக்கள் முத்தாய் மணியாய் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. வாழ்க்கைக்கு வழிகாட்டும் கருத்துக்கள் வாழ்நாள் முழுவதும் பயன்தரும்! பாராட்டுக்கள்

– சி. சண்முகானந்தம், கோபாலசமுத்திரம்.

"பங்குனி, சித்திரை இதழில் "அரசியல் உலகில் மாதவம்" என குறப்பிட்டது காலத்தால் அழியாத வார்த்தை. 1962, 1967, 1972, திருப்புத்தூர் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு, அண்ணா, அவையில் அமைச்சரவையில் சட்ட அமைச்சராக பணியாற்றிய பண்பாளர். மீண்டும் 1984ம் ஆண்டு சட்டப்பேரவை உறுப்பினராகவும், 1991ம் ஆண்டு ராஜ்யசபா M.P. உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டவர். எம்.ஜி.ஆர். தொடங்கிய அ.இ.அ.தி.மு.க.வில் நம்பிக்கையான பொருளாளர் பதவி வகித்தவர். கலைஞர் முதல்வராக இருந்தபோது இந்தியத் தலைநகர் தில்லி மாநகரம் செல்லும் போதெல்லாம் செல்லையாபிள்ளை மகன் மாதவனையே அழைத்துச் செல்வார். குருமகாசந்நிதானம், சட்டமேலவை உறுப்பினர் பதவியை ஏற்க மறுத்தபோது, பல்வேறு உதாரணங்களை கூறி, ஆன்மீகமும் – அரசியலும் ஒன்றுபட்டால்தான், உறவுகள் மேம்படும் எனக் கருத்தை தெளிவுபடுத்தி குருமகாசந்நிதானத்தை MLC யாக பதவியேற்கச் செய்த பெருந்தகையாளர். 1933ல் பிறந்து 2018 வரை 86 ஆண்டுகளில் 70 ஆண்டுகள், பொதுவாழ்வில் புடம் போட்ட தங்கமாய்ப் புகழ்பெற்ற அமைதிப் பேரறிஞர். வாழ்க மாதவனார்.

– வ. பழனிக்குமார், கண்டரமாணிக்கம்



பேசுகிறது குரங்கு!

(கவிவேந்தர். கா. வேழுவேந்தன்)



"குரங்குவழிப் பிறந்தவன்தான் மனிதன்" என்றா
 கூறிவிட்டீர் "டார்வி"னய்யா? தவறி ழைத்தீர்!
கரங்குவித்தே வேண்டுகின்றோம், மனிதப் பூச்சி
 கடுகளவும் எமக்கிணையாய் ஆவதுண்டா?
இரக்கமின்றிக் கருக்கரிவாள் தூக்கித் தங்கள்
 இனத்தவரைக் குரங்கினத்தார் கொல்வ தேது?
அரக்கமனம் கொண்டிங்கே மாற்றார் சொத்தை
 அபகரிக்கும் வஞ்சநெஞ்சம் குரங்குக் குண்டா?

மரம்மாறித் தாவிடுவோம்; எனினும் நாங்கள்
 மதம்மாறிக் களரிகளை விளைவித் தோமா?
சரம்சரமாய் கனிமரத்தில் குலுங்கி னாலும்
 தமக் கென்றே பதுக்கிவைக்கும் கள்ளம் உண்டா?
உரமற்றோர் திறமற்றோர் எனினும் நாங்கள்
 உயிர் அழித்தே ஊன் வளர்த்தல் ஏது? ஓடும்
நரம்பெல்லாம் குருதியெலாம் பாழ்செய் கின்ற
 நாற்றமிகு மது உண்ணல் உண்டா? சொல்வீர்!

நம்பிக்கை ஊட்டிப் பின் கழுத்த றுக்கும்
 நாசகுணம் எங்களுக்கும் உண்டா? சொந்தத்
தம்பிக்கும் தமையனுக்கும் இடையே வேலித்
 தடுப்பமைக்கும் கொடும்பழக்கம் எங்கட் கேது?
வெம்பிஉளம் வெடித்தொருநாள் தற்கொ லைக்கே
 விடம்தேடும் குள்ளமனம் எமக்கா உண்டு?
நம்பிஉமைக் கெஞ்சுகின்றோம்; எழுந்து வந்து,
 "நாங்களவர் முன்னோரே அல்ல" என்பீர்!

நினைவுகளே! நினைவுகளே!

(முனைவர். மி. நோயல்)



"நினைவுகளே! நினைவுகளே!
நின்று போக மாட்டீரோ!
நிம்மதியைத் தாரீரோ!"

உண்மைதான். நமக்கு மிகவும் நெருக்கமானவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோன நினைவுகள் வேதனை தருபவைதான். ஆனாலும் அவர்கள் வாழ்ந்த காலங்களையும் கற்றுத்தந்த பாடங்களையும் ஆண்டுக்கு ஒரே ஒருமுறையாவது கொஞ்சம் நன்றியோடு நினைத்துப் பார்ப்பது சோகக் கீற்றுக்களையும் ஊடுருவி வரும் ஒரு சுகமான தென்றல்தான்.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் இருபத்தி மூன்றம் நினைவுநாள் நிகழ்வுகள் 29.4.2018இல் நடைபெற இருப்பதைத் தம்பி பாண்டி வந்து முதல்நாள் இரவுதான் சொன்னார். அழைப்பிதழும் தந்தார். மறுநாள் பழைய சோகச் சுகங்களை அசைபோட்டபடி குன்றக்குடி சென்றேன்.

அடிகளாரின் வாழ்க்கை பலராலும் மறக்க முடியாத ஒன்று. தமிழ் மக்கள் யாவரும் மறக்கக்கூடாத ஒன்று, எழுபது ஆண்டுகளில் (1925 - 1995) எவ்வளவு பெரிய வாழ்க்கை!

ஒரு ஆன்மீகவாதியாகத் தொடங்கிய வாழ்க்கைப் பயணம்! நாத்திக வாதத்தை எதிர்கொள்ள சக ஆன்மீகவாதிகளை ஒன்று சேர்த்து நிகழ்த்திய போராட்டம்! சமூக நலத்திற்காக பகுத்தறிவு வாதத்தோடு செய்து கொள்ளப்பட்ட சமரசம். வறுமை ஒழிப்புக்காகப் பொதுவுடைமை வாதிகளுடன் கைகோர்த்துக்கொண்ட புதிய புரட்சி ஆன்மிகம்.

இந்தச் சமூக மாற்றங்களை எல்லாம் தமிழ்ச் சமூகத்துக்கு எடுத்துச்செல்ல அவர் கையில் எடுத்துக்கொண்ட மிகப்பெரிய போர்வாள் தமிழ்தான். மேடைத்தமிழ், பட்டிமன்றத் தமிழ், தமிழ் நெஞ்சங்களைத் தன்பால் ஈர்த்துச் சிந்திக்கத் தூண்டிய தமிழ்! தமிழ்! தமிழ்! தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்காக தேசீய அரசியலிலும் தமிழக அரசியலிலும் உருவாக்கிக் கொண்ட நட்புறவு.

இருபதாண்டுகள் இந்தச் சூறாவளி வாழ்க்கையைத் தாண்டி 1977இல் தொடங்கிய அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சிப்பயணம். இந்தப் பயணத்தில் என்னைப்போன்ற அறிவியல் ஆய்வாளர்களுக்குக் கிடைத்த நெருக்கமான உறவு.

குன்றக்குடி கிராம வளர்ச்சிப் பணிகளில் எங்கள் மூத்த விஞ்ஞானி டாக்டர்.கே.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் அடிகளாருக்கும் ஏற்பட்ட நெருக்கமான நல்லுறவு. 1995 முதல் இன்றுவரை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாருக்கும் அவருக்கும் எந்தவித மாற்றமுமில்லாமல் தொடரும் புதுஉறவு. கிட்டத்தட்ட நாற்பதாண்டுகளில் சமூகப் பணியை மையமாகக் கொண்ட ஆன்மீக அறிவியல் நட்புறவு.

சென்ற குருபூசை விழாவுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. அடிகளாரின் நினைவைப் போற்றும் வகையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் விருது. இந்த விருதுக்கு முழுமையும் தகுதிபெற்ற எங்கள் மூத்த நண்பர் டாக்டர்.கே.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு இந்த ஆண்டு கிடைத்திருக்கிறது.

விழா 10.30 மணியளவில் தொடங்கியது. வந்திருந்தவர்களை கி.சிங்காரவடிவேல் வரவேற்றார். குன்றக்குடி மகளிர் கல்வியல் கல்லூரி முதல்வர் டாக்டர்.எஸ்.மோகன் அவர்கள் அடிகளாரின் வாழ்க்கைப் பயணத்தை ஆழமான குறிப்புகளுடன் விளக்கினார். அவரைத் தொடர்ந்து பாராட்டுரை வழங்க வந்த அருள்திரு கோவிந்தானந்த சுவாமிகள் அடிகளாரின் நிவைுகளைப் போற்றும் வகையில் அவர் விட்டுச்சென்ற பணிகளை இன்னும் தீவிரமாகத் தொடர வேண்டும் என்றார். இல்லாவிட்டால் புதிய தலைமுறையினர் அடிகளாரையே மறந்துவிடக்கூடும் என்று குறிப்பிட்டார். இந்த விவாதம் தொடர்ந்து கொஞ்சம் சூடான சுவையான விவாதத்துக்குத் தொடக்கமாக அமைந்தது.

அடிகளார் விருதுபெற்ற விஞ்ஞானி கே.பாலகிருஷ்ணன் அவர்களின் உரை உணர்ச்சிகரமாக அமைந்தது. அடிகளார் தன் வீட்டுக்கே வந்து தன்னைச் சகோதரன் என்று குறிப்பிட்டதைச் சொல்லும்போது கொஞ்சம் கலங்கித்தான் போனார். அடிகளாருக்குப் பிறகும் தொடரும் சமூகப் பணிகளை அவர் பட்டியலிட்டார். வேலைவாய்ப்புப் பயிற்சி மையம், தொழில் நுட்ப மையம், கல்வியியல் கல்லூரிகள் எல்லாமே பலருக்கும் வேலைவாய்ப்புப் பயிற்சியை வழங்கிவருவதை அவர் சுட்டிக்காட்டினார். குன்றக்குடிப்பகுதி மகளிர் மேம்பாட்டுப் பணிகள் பற்றிக்கொஞ்சம் விரிவாகவே குறிப்பிட்டார். ஆனால் அவருடைய உரை இரண்டு குன்றக்குடி அடிகளார்களோடும் குன்றக்குடி

மடத்தோடும், குன்றக்குடிக் கல்வி, பயிற்சி மையங்களோடும் அவர் தொடர்ந்து வளர்த்துக்கொண்டே இருக்கும் உறவுகளைச் சுற்றியே வலம்வந்தது.

குன்றக்குடிப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளத் தனக்குத் துணை நின்ற தன் குடும்பத்தினருக்குத்தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். இந்தப் பகுதியில் கொஞ்சம் நகைச்சுவையும் கலந்திருந்தது. வந்திருந்த குடும்பத்தினரும் மகிழ்ச்சியோடு பங்கேற்றதும் நிறைவாய் அமைந்தது. குன்றக்குடி மடத்துடன் தனது உறவு தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் என்கிற உருக்கமான ஆசையைக் குறிப்பிட்டுத் தன் உரையை நிறைவு செய்தார்.

விருது வழங்கிச் சிறப்புரை நிகழ்த்திய தவத்திரு பொன்னம்பல அடிகளாருக்கும் கூடக் கொஞ்சம் உணர்ச்சிமேலிடத்தான் செய்தது. 23 வருடங்களுக்கு முன், அடிகளார் நிறைவெய்தியதற்கு முந்திய இரவில் தாமும், திரு. பாலகிருஷ்ணனும் உடனிருந்ததை உருக்கம் மேலிட நினைவு கூர்ந்தார். அடிகளார் அப்போது தாம் செய்து முடிக்க விரும்பிய பணிகள் பற்றிப் பேசியதை எல்லாம் நிறைவேற்றத் தாம் மேற்கொண்ட முயற்சிகளை விளக்கினார். இந்த முயற்சிகளில் எல்லாம் தனக்குத் துணை நின்ற திரு. பாலகிருஷ்ணனைப் பெரிதும் போற்றினார். அடிகளார் அவர்களால் பயன்பெற்ற நிறுவனங்களும், பணியாளர்களும் இந்த நாளில் அவரை நன்றியோடு நினைத்துப் பார்க்கக் கடன்பட்டவர்கள் என்பதை அழுத்தமாக எடுத்துச்சொன்னார்.

கம்பன் வீட்டுக் கட்டிலும் கவிபாடும் என்பார்கள். குன்றக்குடித் தமிழ் மடத்தில் பணிசெய்து வரும் நண்பர்களும் அன்று அடிகளாரை நினைவுகூர்ந்தார்கள்! அழகாக! திரு. சிங்காரவேலன் குரல்வளம் தொடங்கித் தமக்கு வரவிருந்த விருதுகளைப் பிறருக்குப் பரிந்துரைப்பது வரை தவத்திரு அடிகளாருக்கும், பொன்னம்பல அடிகளாருக்கும் வேற்றுமை காணவே முடியாது என்றார். சில நிகழ்வுகளையும் சான்றாகக் குறிப்பிட்டார்.

45ஆவது குருமகாசந்நிதானம் குன்றக்குடியில் 45 ஆண்டுகள் (முதலில் தம்பிரானாகவும் பின்னால் தலைவராகவும்) பணியாற்றியதைத் திரு. செல்வராசு சுட்டிக் காட்டிப் பேசினார். அடிகளாரும் திரு பாலகிருஷ்ணன் அவர்களும் அந்த நாட்களில் குன்றக்குடிக்குத் தேவையான தொழில்நுட்பங்களைத் தேடி நாடெங்கும் பல ஆய்வு நிறுவனங்களுக்குச் சென்று வந்ததை நினைவுகூர்ந்தார்.

சில நெருங்கிய அன்பர்களும் வந்திருந்தனர். அன்று அடிகளாரின் பேச்சுக்களுக்கு இலக்கிய நூலகமாகவே விளங்கிய மரு. பரமகுரு அவர்களையும் மடத்தோடு நெடுங்காலமாக தொடர்புடைய பணியாளர்களையும் காண முடிந்தது.

பகல் 12.30 மணியளவில் அருள்நெறித்தந்தை அடிகளாரின் குருமூர்த்த வழிபாட்டிலும் எல்லாரும் கலந்துகொண்டோம். அதைத் தொடர்ந்து அன்னதான நிகழ்ச்சியோடு விழா நிறைவுக்கு வந்தது.

விழா நிறைவுபெற்ற பிறகும் அந்த விழாவில் எழுப்பப்பட்ட சில நியாயமான கேள்விகள் நெஞ்சை உறுத்தின.

அடிகளாரை நாம் உண்மையிலேயே மறந்துவிட்டோமா? இதில் ஓரளவு உண்மை இருப்பதைக் கொஞ்சம் வருத்தத்தோடு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இது அவசர உலகம்! வாழ்க்கைத் தேவைகளையும் ஆசைகளையும் நிறைவுசெய்துகொள்ள முடியாமல் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கும் உலகம். இங்கே அண்ணல் காந்தி அடிகளையே நம் நினைவில் வைத்திருக்கிறோமா? தெரியவில்லையே!

அடிகளார் தொடங்கிய பணிகள் முடங்கிப்போய் விட்டனவா? இல்லை. நிச்சயமில்லை. காலப்போக்கிற்கு ஏற்ப குன்றக்குடியின் சமூகத் தேவைகளும் மாறி வருகிறது. ஐம்பதுகளில் ஏழைமக்களின் வயிற்றுப்பசியைப் போக்கக் கஞ்சி ஊற்றிய மடம், எழுபதுகளில் படிக்காத கூலித் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு அமைப்புகள் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்த மடம்!

இன்று அந்தச் சமூகம் குன்றக்குடியில் இல்லை. அன்றைய குடும்பங்களிலிருந்து இளைஞர்களும் இளம் பெண்களும் வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் பணிசெய்கிறார்கள். இளைய தலைமுறைக்கு நல்ல கல்வியையும் வேலை வாய்ப்புக்கான பயிற்சியையும் தருவதுதான், அந்தச் சமூகத்தின் தேவை. காலத்தேவைக்கேற்ப செயல்திட்டங்களை வகுத்துக்கொள்வதுதான் அடிகளார் கற்றுத்தந்த பாடம். திருமடம் இன்றும் பின்பற்றும் பாடம்.

நாம் தொடக்கத்தில் குறிப்பிட்ட கண்ணதாசனின் வரிகளைக் கொஞ்சம் மன நிறைவோடு மாற்றிக் கொள்ளலாமா?

நினைவுகளே! நினைவுகளே!
மீண்டும்வர மாட்டீரோ!
மன நிறைவைத் தாரீரோ!

★



குன்றக்குடி

அருள்தரு சண்முகநாதப் பெருமான் விசாகப் பெருவிழா

குன்றக்குடியில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் விசாகப் பெருவிழா 28.5.2018 திங்கட்கிழமை வழக்கம்போல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழா நாளன்று காலை 7.00 மணியளவில் திருக்கோயிலிலிருந்து அருள்தரு சண்முகநாதப் பெருமான் வெட்டிவேர் அலங்காரத்துடன் எழுந்தருளி திருக்கோயில் யானை முன் செல்ல மங்கல இசையுடன் திருமடத்துக்கு வந்தார். கீழரதவீதி - தெற்குரதவீதி சந்திப்பில் மங்கல மங்கையர் ஆரத்தி எடுத்தனர். திருமடத்து பூசைமடத்திலிருந்து பெரியோர்களும் மங்கல மங்கையரும் சீர்வரிசை எடுத்துக்கொண்டு போய் பெருமானை வழிபட்டு, வரவேற்றனர். 46-வது திருவருள்திரு குருமகாசந்நிதானம் பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருமடத்தின் முகப்பில் எதிர்கொண்டு திருமடத்துக்கு அழைத்து வந்தார்கள். நேரே அருள்தரு காளத்திநாதர் சந்நிதிக்கு அருள்தரு சண்முகநாதப் பெருமான் செல்ல சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. பின்னர் கொலுமண்டபத்திற்கு எழுந்தருளினார். கொலுமண்டபத்தில் மூன்று முறை வலமாக வந்தார். வேதபாராயணம் முதல் சுற்றும், திருமுறைப் பாராயணம் இரண்டாம் சுற்றும் நாதசுர இசை முழக்கம் மூன்றாம் சுற்றும் நடைபெற்றது. பின் கொலுமண்டபத்தின் மைய மண்டபத்தில் எழுந்தருளினார். இத்தருணத்தில் கவிஞர் அறுவர் வரவேற்று கவிதை பாடி வரவேற்றனர்.


அடுத்து பகல் 11.30 மணியளவில் சிறப்புத் திருமுழுக்காட்டல் நடைபெற்று 12.30 மணியளவில் மணியளவில் பச்சை சாத்துப்படி செய்து சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சியை நூற்றுக்கணக்கான மெய்யன்பர்கள் தரிசித்து அருள்பெற்றனர்.

இரவு 7.00 மணி அளவில் பாராட்டுவிழா நடைபெற்றது. திரு.அரு.மாசிலாமணி ஓதுவார் இறை வாழ்த்துப் பாடினார். திரு.முனைவர்.சொ.சேதுபதி அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்று, கோவை. திரு.சு. பழனிச்சாமி அவர்களுக்கு "அறமனச் செம்மல்" எனும் பட்டம் வழங்கிப் பாராட்டுப் பட்டயமும் கேடயமும் வழங்கிச் சிறப்பித்தார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு.முனைவர்.எஸ்.சுப்பையா அவர்களும் கோவை திருக்கயிலைமாமணி, அருள்நெறிப்புரவலர் திரு.பழ.தரும. ஆறுமுகம் அவர்களும் பாராட்டுரை வழங்கினார். திரு. பேராசிரியர் முனைவர்.சொ.சேதுபதி அவர்கள் நன்றி கூறினார்.

இரவு 10.00 மணி அளவில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் வெள்ளிரதத்தில் எழுந்தருளி திருவீதி உலா வந்தார். நூற்றுக்கணக்கான மெய்யன்பர்கள் தரிசனம் செய்து அருட்பேறு பெற்றனர். விழா இனிதே நிறைவெய்தியது.

இறைவன் தரும் ஆனந்தத்தின் பெரும்பகுதி மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கிலும் நிரம்பியுள்ளது. அதற்கு மேலும் ஆழமாக விரிந்து நின்று நம்மை ஆட்கொள்ளும் வகையில் உள்ளது. இறைவன் தருகின்ற ஆனந்தத்தை விரும்புபவர் உலகியற் பொருள் நிதியை விரும்பாமலும் அருள்நிதியையே விரும்புவர். இந்த அருள் நிதி நம்மைத் தரத்தோடும் தகுதியோடும் பக்குவமாக அன்பால் வளர்க்க, வளர்க்க நம்முள் வளரும் "நான்" என்ற அகங்காரம் மறைய, மறையப் பேரின்பப் பெருங்கடல் பேரானந்தத்தை அனுபவிக்கலாம்.

- தவத்திரு பொன்னம்பல அடிகளார்



குன்றக்குடியில்
முத்தமிழறிஞர்.டாக்டர். கலைஞர் மறைவிற்கு
அமைதி ஊர்வலம், இரங்கல் கூட்டம்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மறைவுக்கு இரங்கல் கூட்டம் குன்றக்குடி ஊர்ப் பொதுமக்கள் சார்பாக 8.8.2018 மாலை 4.30 மணியளவில் குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அமைதி ஊர்வலம் குன்றக்குடி கீழரதவீதியில் தொடங்கி, கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து - மலர்தூவி அஞ்சலி செய்யப்பட்டது. பின் குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் தலைமையில் அமைதி ஊர்வலம் நான்கு ரத வீதிகளிலும் வந்து கீழரதவீதியில் நிறைவுபெற்றது. ஊர்வலத்தில் கிராமப் பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கீழரதவீதி கோயில்வாசல் தகரக் கொட்டகையில், முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி இரண்டு நிமிட மவுனத்திற்குப் பின், தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள், முத்தமிழறிஞர். டாக்டர். கலைஞர் அவர்களின் தொண்டுகள் பற்றி உரை நிகழ்த்தினார். கிராமப் பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்திய பின் கூட்டம் நிறைவு பெற்றது.

சுதந்திரத்தின் உண்மைப் பொருள்

சுதந்திரத்தின் உண்மைப் பொருள் நமக்குச் சொந்தமாக ஒரு கொடி பறப்பது மட்டுமல்ல, மக்களின் வாழ்வியல் உண்மைகளைக் காப்பதும் உண்மையான சுதந்திரம் ஆகும். சுதந்திரத்திற்காகத் தங்கள் நரம்புகளையும், சதைகளையும் அறுத்து இரத்தத்தில் குழைத்துக் கொடுத்த அந்த இலட்சியத் தலைவர்கள் இந்திய மண்ணில் கற்பனைக்கு எட்டாத ஒரு சொர்க்கத்தையே கனவு கண்டார்கள். இந்தச் சொர்க்கத்தின் அஸ்திவாரத்தையாவது இந்த 50 ஆண்டுகளில் நாம் கட்டியிருக்கிறோமா? இன்னும் கட்டவில்லை!

நமது அரசியல் சமூக முடிவுகள் எல்லாம் அந்தந்த நிமிடங்களைப் பற்றி கவலைப்படுகின்றனவே தவிர, அடுத்த விடியலைப்பற்றி ஆதங்கப்படவில்லை!

கண்ணீரும், செந்நீரும் சிந்திப் பெறப்பட்ட சுதந்திரம், உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்று பெற்ற சுதந்திரம், நம் விழிகளின் உப்புநீர் வடிவதற்குத்தானா? அந்நியப் பொருட்களைப் புறக்கணித்துப் பெறப்பட்ட விடுதலை நாட்டில் நம் சொந்த உடலைத் தவிர அனைத்திலும் அந்நிய ஆக்கிரமிப்பு.

ஒரு புறத்தில் அந்நிய நாடுகளில் இருந்து, உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி நடைபெறுகின்றது. மறுபுறத்தில் நம் நாட்டின் உடல் உழைப்பாளர்களான உற்பத்தியாளர்களே ஏற்றுமதி ஆகின்றார்கள். காந்தியின் சிதைக்குத் தீ மூட்டிய கையோடு, காந்தியத்திற்கும் தீ மூட்டிவிட்டோம்! ஒப்பற்ற அகிம்சை கொள்கையின் வெற்றி, வன்முறைக் கலாச்சாரத்தால் வீணடிக்கப்படுகின்றது! இழந்த தேசத்தை மீட்கும் முயற்சியில் இறங்குவோம்! விவசாயிகளின் விழிநீர் துடைக்கின்ற நிலை நோக்கி, தேசத்தின் பொருளாதாரப் பாதை நகரட்டும்.

- தவத்திரு பொன்னம்பல அடிகளார்

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது

பழநி

பரிமள விலாஸ்

S.சித்தனாதன்

ஜவ்வாது வாசனை விபூதி

&

ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்

அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

Phone: 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி, 2. அழகுக்கலை, 3.லெதர் & ரெக்ஸின் பொருட்கள் தயாரித்தல், 4. பற்றவைப்பு (ஆர்க் & கேஸ் வெல்டிங்), 5.செல்போன் பழுது நீக்குதல், 6. T.V, Radio- பழுது நீக்குதல், 7. எம்ப்ராய்டரி 8. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், 9.வீட்டு வயரிங் வேலை செய்தல், 10. இரண்டு சக்கர வாகனம்பழுது நீக்குதல், 11. ஆபரண நகை தயாரித்தல், 12. திரை அச்சு வேலை, 13. சேலை டிசைனிங், 14. கைவினைப் பொருட்கள் தயாரித்தல், 15.பொம்மைகள் தயாரித்தல், 16. காகித உறை மற்றும் பைகள் தயாரித்தல், 17. வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்குதல், 18. உணவுப் பொருட்கள் தயாரித்தல், 19. பேப்ரிக் பெயிண்டிங், 20. சாக்பீஸ், மெழுகுவர்த்தி, பினாயில், சாம்பிராணி தயாரித்தல் 21. கயிறு திரித்தல், 22. GFRB பொருட்கள் தயாரிப்பு, 23. சேலை புதுப்பித்தல் சுருக்கம் நீக்குதல், 24. எலக்ட்ரானிக் சோக் தயாரித்தல், 25. கூடை முடைதல், 26.உல்லன் நிட்டிங் 27. நாப்கின் தயாரித்தல், 28. தையல் இயந்திரம் பழுது நீக்குதல், 29. போட்டோ லேமினேசன், 30. ஐஸ்கிரீம் தயாரித்தல் 31. காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல்,

தகுதி	:	தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.
பயிற்சி நேரம்	:	பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.
குறிப்பு	:	ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.



குன்றக்குடி விசாகவிழாவில் அருள்தரு சண்முகநாதப்பெருமான்
ஆதீனத்திருமடத்திற்கு எழுந்தருளல்



தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் அவதாரத்திருநாள்
தமிழகஅரசு விழா நாள்: 17-07-2018

BOOK POST
Book pocket containing printed matter **Price Rs. 8-00**
MAKKAL CHINTHANAI-June-August 2018 Date of Publication 28-08-2018



குன்றக்குடி விசாகவிழாவில் கோவை க.பழனிச்சாமி அவர்களுக்கு
'அறமனச்செம்மல்' பட்டம் வழங்கி பாராட்டும் நிகழ்வு நாள் : 28 - 05 - 2018



C24
கவிஞர்.நா.மீனவன்
எண்.2டி/2/பிளாட்
நாச்சியப்பா ராயல் அபார்ட்மெண்ட்
அம்பாள்புரம் 3ம் வீதி
காரைக்குடி/630002

பெறுநர்

திரு ________ அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அ... குன்றக்குடி. ☎ : 264166